பக்கங்கள் 12 விலை சதம் 15

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 9-7-61 ஞாயிறு | இதழ் 4

# அமெரிக்கா தந்த தருமப் பால் பவுடர் கள்ளச் சந்தையில்!

## பால் - ஐஸ்கிறிம் - கோப்பி கலப்படம்! கலப்படம்!


பள்ளிக் குழந்தைகளுக்கு பணிசும், பாலும் வழங்கப்படுவது தெரிந்ததே. இந்தப்பால் தயாரிப்புக்கான மாவை இலவசமாக அமெரிக்க 'கெயர்' ஸ்தாபனம் வழங்கிவருகின்றது. சில பாடசாலை தலைமையாசிரியர்களது பேராசைத் தனத்தால் பள்ளிக் குழந்தைகளுக் குரிய மாவு கள்ளச்சந்தைக்கு கைமாறப்படுவதாக நம்பகமானசெய்தி 'புதினத்' துக்கு கிடைத்துள்ளது.

கள்ளச் சந்தைக்கு கடத்தப்படும் பால் மாவு பால்பண்ணைகளிலும், ஹோட்டல்களிலும் சுயம் பாலாக விற்பனையாகிறதென்றும், இன்னும்ஐஸ்கிறீம் முதலியனசெய்வதற்கும் பயன்படுத்தப்படுவதாகவும் அறியவருகின்றது.

Non fat dry Milk donated by the people of the United State of America Not to be sold or exchanced. (அமெரிக்க மக்களது இலங்கை குழந்தைகளுக்கான அன்பளிப்பு-விற்கவோ மாற்றவோ கூடாது) என்ற வேண்டுகோளுடன் இலங்கைக்கு வரும் இந்த நன்கொடை இப்படிப் பகிரங்க இரகசியமாக துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமலிருப்பது கண்டு பெற்றோர்களும் பொது மக்களும் அதிருப்தியும் கவலையும் கொண்டுள்ளனர்.

சமசமாஜக் கட்சிப் பிரமுகர் லெஸ்லி குணவர்த்தன எம்.பி. இது விடயமாக உடனடியாக விசாரணை நடத்தி—நடவடிக்கை எடுக்கும்படி கல்வி அமைச்சரைக் கேட்டிருக்கிறார்.

சில மாதங்களுக்கு முன்னால் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த மண்டைதீவில்பெருந்தொகையான மேற்படிபால்பவுடர்டின்கள் (பால்பவுடரோடு) குவியலாக கொட்டிக் கிடந்ததை யாழ்ப்பாணப் பொலீசார் எடுத்தனரெனினும் அதை அவ்விதம்




போட்டவர்களைக் கண்டுபிடித்ததாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கையின் எல்லாப் பகுதிகளிலுமே இந்தமோசடிகேட்பாரற்று நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

# டாக்டர் என். எம். பெரேராவின் தலைமைக்கு ஆபத்து!

## சமரக்கொடி தலைமையில் புரட்சிக்குழு சீறுகிறது!

சமசமாச வட்டாரங்களில் குசு குசுப் பேச்சுக்களும் குட்டி மகாநாடுகளும் நடைபெற்று வருவதாகத் தெரிய வருகிறது.

அமெரிக்கா சென்றுள்ள என். எம். அமெரிக்கவாழ்க்கை முறையைப் புகழ்ந்தும், இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையே நெருங்கிய பிணைப்பு வேண்டுமெனறும் பேசியதுதான் சமசமாச வட்டாரங்களில் ஏற்பட்டுள்ள பரபரப்புக்குக் காரணவாகும்.

**'அமெரிக்க எதிர்ப்பு மனப்பான்மையிலிருந்து என். எம். நழுவிவிட்டாரா?'**

அமெரிக்காவிலிருந்து அவர் திரும்பியதும் அவரை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் பல. பலருடைய பலகேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டிய நிலைமை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

அண்மைக் காலக் கட்சியின் நடவடிக்கைகளில் அதிருப்தி அடைந்துள்ள பலர் இதனை ஒருபிடி பிடித்து, என். எம்.மை உலுப்பி எடுக்க ஆயத்தம் செய்து வருகின்றனர்.

கட்சியில் ஏற்பட்டுள்ள விரிசல் மேலும் பெரிதாகி கட்சியே இரண்டாகப் பிரியலாம் என்றே நம்பப்படுகிறது.

என். எம். மின் சமீபத்திய கொள்கை "பாட்டுக் கேற்றபடி தாளத்தை மாற்று" என்பதுபோல் அமைந்து விட்டதென்று பலர் கருதுகிறார்கள். "முதலாளி தத்துவத்தை ஒழித்தே தீருவோம்" என்று முழங்கும் எட்மன்ட் சமரக்கொடியை இவர்கள் சதா சுற்றிவந்தவண்ணமிருக்கின்றனர். காலகதியில் சமசமாசக்கட்சியின் சர்வவல்லமை மிக்க மனிதனாக எட்மன்ட் சமரக்கொடி வந்து விடுவாரோ என்று என். எம். கோஷ்டி அஞ்சுகிறதாம். எட்மன்ட் சமரக்கொடிக்கு சமசமாசவட்டாரத்தில் செல்வாக்கு வளர்ந்துவருவது தான் இதற்குக்காரணமென்று கூறப்படுகிறது.

'எண்ணெய்ச் சட்டியிலிருந்து நெருப்பில் குதிப்பதுபோல ஓரளவாவது முற்போக்குக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் அரசாங்கத்தை ஆதரிக்காமல் சண்டித்தனம் செய்தால் ஐ. தே. கட்சி பதவிக்கு வந்துவிடுமென்றும் அதனால் பேராபத்துகள் விளையலாமென்றும் என். எம். கோஷ்டி கருதுகிறதாம், எது எப்படியிருந்தாலும் என், எம். சிறந்த அரசியல் அறிவு பெற்றவர் என்பதும், நிர்வாகத்திறன் மிக்கவரென்பதும், அவரது எதிரிகளே ஒப்புக்கொண்ட உண்மை. பதவிக்கு வரும் எந்த அரசாங்கத்தையும் எதிர்த்து நிற்கக் கூடிய ஒரேயொரு கட்சி சமசமாசக்கட்சிதான் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அந்தக் கட்சிக்குள்ளேயே பிளவு ஏற்பட்டால் வருங்கால அரசியல் நிலை எப்படியெப்படி மாறிவிடுமோ வேன்று அரசியல் அவதானிகள் அஞ்சுகிறார்கள்.


**மிஸிஸ் கதிறவேல்**உங்களுக்குப் புதியவரல்ல. ஞாயிற்றுக் கிழமைகளில் தவறாது இவரைக் கோல்பேஸில் கண்டிருப்பீர்கள். மற்றநாட்களில், பகலில் கொழும்புக்கடைப் பேலியிலும் மாலையில் 'பார்க்'குகளிலும் 'கிளப்'புகளிலும் இவரைப் பார்த்திருப்பீர்கள். இவரைப்பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்காதவர்களுக்கு இலங்கையின் பிரபல கேலிச் சித்திரக்காரரர் "சிவாஜி" இவரை அறிமுகம் செய்து வைக்கிறார். 'எங்கே' என்று கேட்கிறீர்களா? புரட்டுங்கள் ஏழாம் பக்கத்தை!



அடுத்த கிழமைகளிலும் இவரை நீங்கள் சந்திக்கலாம்!

'சிவாஜி' யின் காட்டூன்கள் பக்கம மூன்று, பக்கம் ஏழு பார்க்க.

சோமுப் பெரியார் “தனக்கொரு நியாயம்”



சோ. பெ.: அம்மாடி, இன்றைக்குச் சரியான கூட்டம் போலிருக்கே!

சோ. பெ.: மனிசர் இருக்க இடமில்லாமல் தவிக்கினம். ........ எழும்பய்யா! .........

சோ. பெ. ஒருமாதிரி இருக்க இடம் கிடைச்சுது. இனி கொழும்பு வரையும்... ... இப்படி நித்திரை முழிக்க முடியுமோ .........

சோ. பெ.: ( தனக்குள் ) ஆட்கள் ஏறுகினம் போலே. கண்ணை மூடிக்கொண்டு நித்திரை மாதிரிக் கிடப்பம்.

உள்ளதைச் சொன்னல்: (பத்திரிகை அலுவலகங்களில் ‘நக்கீரன்’ துப்பறிந்தவை)

# ஏரிக்கரை அலுவலகத்தில் கோள்மூட்டு — ‘குயுக்தியார்’ கைமாறுகிறார்

## —பிரதம ஆசிரியர் ஒருவருக்குச் சம்பளம் இல்லையா?

## — பத்திரிகை விநியோகத்துறையில் பழைய பொலீஸ் சுப்பிரெண்டன்!

ஏரிக்கரையிலிருந்து வரும் தமிழ்த் தினசரிக்கு சிறுகதை எழுத்தாளர் திரு. எஸ். பொன்னுத்துரை முதலில் எடுபட்டார் என்றும் ‘புரட்சிவாதி’ என்று அவரைப் பற்றி அறிந்ததும் அவர் வேலைக்கு அழைக்கப்படவில்லையென்றும் ஒரு வதந்தி இருந்ததல்லவா? பொன்னுத்துரை ஒரு கம்யூனிஸ்ட் என்பதை நிரூபிக்க பத்திரிகையிலிருந்து வெட்டிய பகுதிகளிலிருந்து ஒரு கத்தையை யாரோ ஏரிக்கரை நிர்வாகிகளுக்கு அனுப்பி வைத்தார்களாம். அதில் 1948ல் பொன்னுத்துரை அர்ச். சூசையப்பர் கல்லூரியிலிருந்து விலக்கப்பட்டதையும் அதைப்பற்றித் திரு. பீட்டர் கெனமன் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்டதையும் பற்றிய பத்திரிகைத் துண்டும் இருந்ததாம். ‘தேசாபிமானியில்’ பொன்னுத்துரை எழுதியவை பலவும் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாம்.

* *

தினகரனில் வெளிவரும் ‘உஸ்ஸ்’ பகுதியை இதுவரை எழுதி வந்த திரு. த. சபாரத்தினம் இப்பொழுது எழுதுவதில்லையாம். திரு. சபாரத்தினம் தன்னைத் தொடர்ந்து தாக்குவதாக யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. அல்பிரட் துரையப்பா புகார் செய்ததை யடுத்துத் தற்காலிகமாக ‘உஸ்ஸ்ஸ்’ பகுதியை எழுதவேண்டாமென்று திரு. சபாரத்தினம் கேட்கப்பட்டுள்ளாராம்: இப்பொழுது அப்பகுதியை வேறொருவர் எழுதுவதாகத் தெரிகிறது.

* *

திரு. எஸ். டி. சிவநாயகம் சுதந்திரனை விட்டுவிலகிவிட முடிவு செய்துவிட்டாரா? ‘குயுக்தி’ யாரை அவர் ‘தமிழ்இன்ப’த்திற்கு மாற்றியதன் காரணமென்ன? ஒரு பத்திரிகையில் புகழ்பெற்ற ஒருபகுதியை வேறொரு பத்திரிகைக்கு மாற்றுவது அழகாகுமா? பத்திரிகை தர்மத்திற்கு அது ஏற்றதாகுமா? ‘அரசியல் சாக்கடை’யை விட்டு அவர் இப்பொழுது ‘தமிழ்த் தொண்டு’ புரிய ஆரம்பித்திருக்கிறாரா? —இப்படி ஒரு ‘சுதந்திர’க் குருவி கீச்சிடுகிறது!

* *

ஏழெட்டுப் பத்திரிகையாளர்களை மட்டும் வைத்துக்கொண்டு “வீரகேசரி” நிர்வாகிகள் மாடுமாதிரி வேலை வாங்குகிறார்கள் என்பது உண்மையா? ‘வீரகேசரி’ நிர்வாகம் ஊழியரின் நலத்தில் அக்கறை காட்டாமலிருப்பது உண்மையா?

* *

“தினகரன்” ஆசிரியர் பதவியிலிருந்து விலகி திரு கே. கைலாசபதி பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றப் போகிறார் என்பதைக் கேள்விப்பட்டதும் “தினகரன்” ஆசிரியர் பதவிக்குத் திரு. சோ. நடராசாவும் திரு. எஸ். டி. சிவநாயகமும் விண்ணப்பம் செய்தார்கள் என்று கூறப்படுகிறது. இதில் உண்மை ஏதாவதுண்டா? உண்மையானால், ஏரிக்கரை நெளிவு சுழிவுகளில் புகுந்துவெற்றிகரமாக நிமிர இவர்களால் முடியவில்லையென்றே தோன்றுகிறது.

* *

வீரகேசரியின் பிரதம ஆசிரியர் இப்போது தமது சம்பளத்தைப் பெறுவதில்லை என்றால் நீங்கள் நம்புவீர்களா? சிலதகராறுகள் காரணமாக அவர் தமது சம்பளத்தைப் பெறுவதில்லையென்றும், செலவுப் பணம் மட்டும் வாங்கிக்கொள்ளுகிறாரென்றும் தெரிகிறது.

*

துவக்கப்பட்ட சொற்பகாலத்துக்குள்ளேயே அதிக வாசகர்களைத் தேடிக்கொண்ட ஆங்கிலப் பத்திரிகை ‘டெய்லி மிரர்’. இதன் ஆசிரியப் பகுதியில் முக்கியமான ஒருவர், தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் முன்பு வேலைபார்த்தபோது ‘தமது வேலையில் திருப்தியளிக்காத’ காரணம்காட்டப்பட்டு நீக்கப்பட்டாராம்!

* *

யாழ்ப்பாணப் பகுதியிலும், இலங்கையின் வேறு சில இடங்களிலும் பொலீஸ் சுப்பிரண்டன்டாகக் கடமையாற்றி ஒரு கலக்குக் கலக்கிய ஒரு பிரமுகர், இப்போது ‘டைம்ஸ் ஒவ் சிலோன்’ பத்திரிகையின் விநியோகத் துறையில் பொறுப்பேற்று அங்கேயும் புயல்போல வேலை செய்வது உங்களுக்குத் தெரியுமா?


மீன்பிடிப் படகுக்கு

“டேவிட் பிரவுண் டீசல் எஞ்சின்”

(12 குதிரைப் பவர் கொண்டது)

*

- வேகமாகச் செல்லக்கூடியது
- உறுதியானது
- நீடித்து உழைக்கக்கூடியது
- கியரும் புரொபெல்லரும் பொருத்தப்பட்ட நவீன தயாரிப்பு.

நீங்கள் வாங்கக்கூடிய ஆகச் சிறந்த படகு எஞ்சின் இதுவே!

“டேவிட் பிரவுண் டீசல் எஞ்சின்”

*

விபரங்களுக்கு:

டி. பி. அப்துல்ரஹ்மான் & கோ

350, ஸ்கின்னர்ஸ் ரேட், கொழும்பு-10



‘புதினம்’

சுவையான செய்திக் கிழமை இதழ்

ஓராண்டுக் கட்டணம் ரூபா 8-00

தபால் மூலம் பெற விரும்புவோர் ரூ. 8-00 அனுப்பிவைத்தால் கிழமைதோறும் அனுப்பி வைக்கப்படும்.

‘புதினம்’

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



தேவை


‘புதினம்’ விற்பனையாளர்கள் இல்லாத இடங்களில் நம்பிக்கையும் திறமையுமுள்ள விற்பனையாளர் தேவை.

விபரங்களுக்கு:

‘புதினம்’

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

"நவீன ஸ்ரீ வள்ளி நாடகம்" — சிவாஜி




# ஆசிரியர்கள் மோதல்! மாணவர் பலி

## பரீட்சையைத் திரும்ப நடத்துமாறு கோரிக்கை.

ஆசிரியர் மீது கொண்ட சீற்றத்தை அப்பாவி மாணவர்களிடம் ஒருவர் சாதித்துவிட்டாராம். அதிகாரத்திமிரில் அவ்வாறு செய்தவர் யார் என்பதைஅறிந்துகொண்ட யாழ்ப்பாணம் அரசினர் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியின் தமிழ் சுருக்கெழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவ மாணவிகள் தமக்கு ஏற்படப் போகும் ஏமாற்றத்தை யெண்ணிக் கதிகலங்கித் தவிக்கிருர்கள்.

சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்பின் இறுதிப் பரீட்சைக்குத்தெரிவுசெய்யப்பட்ட வினப்பத்திரம் வேண்டுமென்றே விஷமத்தனமாகத் தயாரிக்கப் பட்டதென்பது அவர்களது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். மேற்படி மாணவர்கள் பரீட்சையில் வெற்றிபெறுவதைவிரும்பாதஒருவர் தருணம் பார்த்துக் கெடுதி செய்துவிட்டாரென்பதற்குப் பின்னணியாக ஒரு சம்பவமும் சொல்லப் பட்டு வருகிறது.

இலங்கை தொழில் நுட்பக் கல்லூரிநிர்வாகத்தைச்சேர்ந்த ஒருவருக்கும் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரிச் சுருக்கெழுத்துப் பயிற்சி ஆசிரியருக்குமிடையில் ஒரு சமயம் அபிப்பிராயபேதம் ஏற்பட்டதாம். வித்துவக்கிறுக்கும், அதிகாரத்திமிரும் ஒன்றுடன் ஒன்று முட்டிக்கொள்ளவே பகைமை வலுவடைந்தது. ஆசிரியருக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என எண்ணிச்சென்றவர் அவரது வகுப்பு மாணவர்கள் மூலம் இந்தப்பாட போதனையை நடத்திப்பார்த்திருக்கிருர். அதாவதுபரீட்சையைக் கடுமையாக்குவது மூலம் மாணவர்களைச் சித்தியடையவிடாது தடுத்து அந்த ஆசிரியரின் திறமைக்குறைவை நிரூபிக்கவேண்டும் என்பது அவரதுதிட்டமாக இருந்திருக்கவேண்டும். எனவே சிவபெருமான் தலையில் இருந்த பாம்பு கருடனிடம் இப்போது சுகம்விசாரித்திருக்கிறது.

வினப்பத்திரம்தயாரித்தவர் யார்? அவருக்கும் இந்தச்சந்தர்ப்ப செயல் வீரருக்குமிடையில் நெருங்கிய தொடர்புண்டா என்பன அம்பலத்தில் வந்தேயாகவேண்டியமர்மங்களாகும்.

சுருக்கெழுத்தின் வேகத்தைப் பரீட்சிப்பதற்காக மேற்படி வினப்பத்திரமூலம் கொடுக்கப்பட்ட வசனங்கள் அவற்றைத் தயாரித்தவரின் திறமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அந்த நான்கு வசனங்களில்ஒன்றைமட்டும்உதாரணத்துக்குஇங்குகுறிப்பிடுகிருேம்.

"ஆனல் மற்றெல்லாவற்றிலும் இருப்பதுபோலவே பண விஷயத்திலும்எளியமுறையில் ஆதிகாலத்தில் ஆரம்பித்துக் காலப்போக்கில் படிப்படியாக சிக்கல் மிகுந்த ஒரு ஸ்தாபனமாகவே பணம் இயங்கத்தலைப் பட்டுவிட்டது."

தமிழ் இலக்கண வரம்பையும் சாதாரண தமிழ் வசன நடையையும் தோற்கடித்துவிட்ட ஒரு புதுவகை அழைப்பைக் கொண்டதான இந்த வ(வி)சனம் பரீட்சார்த்திகளைப் பலப் பரீட்சைக்குள்ளாக்கியதில் வியப்பென்ன இருக்கிறது! ஆகவேதான் பரீட்சையைத் திரும்பவும் நடத்துமாறு அவர்கள் மேலிடத்துக்கு விண்ணப்பித்திருக்கிருர்கள்.

# இறந்துபோனவரே டெலிபோன் பேசினர்

## விஷமத்தனமான தந்தியினல் புங்குடுதீவில் ஏற்பட்ட பரபரப்பு!

திடீரெனத் தந்திவந்தது தமையன் இறந்துவிட்டதாக கொழும்பிலிருந்து புங்குடுதீவுக்கு தம்பி அறிவித்திருந்தார். பெற்றவர்களும் உறவினர்களும் மார்பிலடித்துக் கதறினர்கள்! — இழவு வீடாக ஒப்பாரிவைத்துப் புலம்பினர்கள்!— செத்த வீட்டுக்கான ஏற்பாடுகள் ஜரூராக நடைபெற்றன. கொழும்பிலிருந்து சவத்தைக் கொண்டுவருவதற்காக ஒழுங்கு செய்ய கொழும்புக்கு டெலிபோன் பண்ணியபொழுது செத்தவரே உயிரோடு அங்கிருந்துபேசுவதென்ருல்.. ...மயிர்க் கூச்சலெடுக்க இது துப்பறியும் மர்மக் கதையல்.— கடந்தவாரம் நிஜமாக நடைபெற்ற சம்பவம்தான்! —இந்த மனிதாபிமானமற்ற, மோசடிச்செயலின் சூத்திரதாரி யார்?

சம்பவம் இதுதான்: ஏ. தர்மலிங்கம் என்ற மூத்த சகோதரர் இறந்துவிட்டதாக கொழும்பு செட்டித்தெரு உபதபால் நிலையத்திலிருந்து அவரது இளைய சகோதரர் ஏ. பொன்னம்பலம் அடித்தது போல யாரோவிஷமிகள் புங்குடுதீவு 5-ம் வட்டாரத்திலுள்ள திரு. ஏ கண்ணுத்துரைக்கு தந்தியனுப்பியிருந்தார்கள். புங்குடு தீவில் செத்த வீட்டு ஏற்பாடுகளைக் கவனித்துவிட்டு பிணத்தைக் கொண்டுவருவதற்காக கொழும்புக்குப் புறப்படுமுன் தற்செயலாக திரு. கண்ணுத்துரை கொழும்புக்கு டெலிபோன் பண்ணியபோது இறந்துவிட்டதாக கருதப்பட்ட திரு. தர்மலிங்கமே பேசினராம். அதற்குப்பின்புதான் மேற்படி தந்தி யாரோ செய்த விஷமத்தனம் என்பது தெரியவந்தது.

'நீங்களே பதில் சொல்லுங்கள்' — சென்ற கிழமைப் பதிலும், புதிய கதையும் அடுத்த இதழில் வெளிவரும்.

## மூளைக்கு வேலை

## சென்றகிழமைப் புதிருக்கு விடை.

ஒரு ரூபா கேட்டால் கொடுப்பதற்கு ஒரு ரூபாயை ஒரு பேசில் போடுங்கள். இரண்டு ரூபாயை மற்ருெரு பேசில் போடுங்கள். மூன்று ரூபா கேட்பவருக்கு இரண்டு பேசுகளையும் சேர்த்துக்கொடுக்கலாமல்லவா? இப்பொழுது 4 ரூபா கொண்ட பேஸ்ஒன்று வேண்டும். ஆகவே 4ரூபாவை ஒரு பேசில் போடுங்கள் இப்பொழுது 7 ரூபாவரை பேசைத் திறக்காமலேமூன்று பேஸ்களையும் கொடுக்கலாம். (1+2+4=7) மிகுதியைக் கீழ்க்கண்ட பிரகாரம் பிரித்துப் போடுங்கள். 8-16-32-64-128-256-489. பத்துப் பேஸ்களில் பணத்தைப் போட்டாய் விட்டது. இப்பொழுது ஒரு ரூபாயிலிருந்து ஆயிர ரூபா வரை எத்தனை ரூபா வேண்டுமானுலும் பேசைத் திறக்காமல் பேசாகவே கொடுக்கலாம்

புதினம் 9-7-61

# சில மணி நேரத்தில்

## 100 மைல் நடந்த பயங்கரப் பேய் மனிதன்!

### நம்ப முடியாது - ஆனால் உண்மை!

பேய்களைப்பற்றி பக்கம் பக்கமாகப் படித்திருக்கிறோம். பல கதைகளைக் கேட்டிருக்கிறோம். 'எல்லாம் வெறும் மனப் பயம், என்று முற்போக்கு வாதிகள் வாதிப்பார்கள். உண்மை எப்படியிருந்தாலும் பேய்களைப் பற்றி உலகின் எல்லாப் பகுதிகளிலுமே பேசிக்கொள்ளப்படுகிறது.

1855-ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 9-ந் திகதி பனிப் புயல் வீசியது. வீடுகள், பாதைகள் அனைத்தும் பனியினால் மூடப்பட்டிருந்தன, அப்பொழுது பல உயிர்ச்சேதமும் ஏற்பட்டது. தென்டெவனில் வசித்தவர்கள் இதற்குமுன் இப்படியொரு பனிப்புயலைப்பார்த்ததில்லையாம்

மறுநாள் காலை பனிப்புயல் ஓய்ந்து தமது வீட்டுக்கதவுகளைத்திறந்தவர்கள் பயப்பிராந்தியோடு சிலையாக நின்றனர்,

கிராமத்தை மூடிக்கிடந்த பனிப்பரப்பிலே ஒரு அதிசயக் காலடி தென்பட்டது. இந்த அடி ஏதோ ஒரு மிருகத்தினதைப் போன்றிருந்தது. அப்படியொரு மிருகத்தை அவர்கள் கண்டதுமில்லை - கேட்டதுமில்லை. அதுமிருகமாயிருந்தால் அதற்கு ஒரேயொரு கால்தானிருக்கவேண்டும். 'நிச்சயமாகப் பேய்தான் வந்து உலாவியிருக்கிறது' என்று அவர்கள் திகிலோடு கூறினர்.

இச் செய்தி பல விபரங்களோடு 1855-ம் வருடம் பெப்பிரவரி மாதம் 16-ந் திகதி வெளியான 'டைம்ஸ்' பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது. 16 நாட் கழிந்து 'இலஸ்ரேட்டெட் லண்டன் நியூஸ்' சஞ்சிகையிலும் இச்செய்தி பிரசுரிக்கப் பட்டிருந்தது.

இந்தக் காலடி யாரால் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் - பேயோ, பிராணியோ, மனிதனோ சிலமணி நேரத்தில் நூறுமைல் நடந்திருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை. ஒவ்வொரு அடியும் ஒன்றுக்குப் பின்னே நேரே மற்றொன்றாக அமைந்திருந்தது. இந்த அடிகள் கூரை மேலுள்ள பனிப்படலத்திலும் தென்பட்டன. இந்த அடிகள் கழுதையின் குளம்புபோலிருந்தது. ஒவ்வொன்றும் ஒரே அளவினதாகவுமிருந்தன. அடிகளைச் சுற்றியிருந்த பனி கொஞ்சமும் சிதறியிருக்கவில்லை.

சில சந்தர்ப்பத்தில் இந்த அடிகள் சில வீடுகளின் வாசற்கதவுகள்வரைசென்று திடீரென்று மனம்மாறிவிட்டது போல்திரும்பிச்சென்றிருக்கின்றன.

ஆகப்பெரிய புதிர் என்னவென்றால் இந்த அடிகள் ஒரு குளக்கரையில் முடிவடைந்து பின் மறுகரையில் ஆரம்பிக்கின்றன. இந்தக் குளத்தின் அகலம் சுமார் இரண்டுமைல். இக்குளத்து நீர் பனிக்கட்டியாக உறைந்திருக்கவில்லையாம். அப்போது எப்படி இந்தப்பிராணி குளத்தைக் கடந்தது? நீந்திச் சென்றிருக்கலாம்.

இது ஒருவகைப் பட்சியாக இருக்கமுடியுமோ? குளம்பு போன்ற கால்களையுடைய பட்சிகளைப்பற்றி யாராவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பட்சியாகவிருந்தாலும் கால் ஒன்றுதானே இருந்திருக்க வேண்டும். கிராமமக்கள் கூறுவது போல் இது பேயேதானோ?

# அந்தப்புரத்தில் 600 மனைவியர்

## அதுவும் போதாத அதிசயத் தலைவன்!

## ஐ. நா. சபையே அவனிடம் தோற்றுவிட்டது

**எங்கள் மணவாழ்வில் யாரும் தலையிட வேண்டாம் நாங்கள் ஒற்றுமையாக அவரைப் பகிர்ந்து அனுபவிக்கிறோம்.**
**—200 மனைவிகளின் வேண்டுகோள்**

''ஒரேயொரு ஊரிலே ஒரேயொரு ராசா இருந்தார்...அவருக்கு 600 மனைவிகள் . . ...''

பாட்டிகதையென்று நினைக்கிறீர்களா? அப்படி நினைத்தால் ஏமாந்துதான் போவீர்கள் கதையல்ல; இது இன்றைய உண்மைச் சம்பவம்.

இவன் பிக்கோம் தலைவன். இவனது அந்தப்புரத்தில் 600 மனைவிகள் இருக்கிறார்கள். இவன் கிழவனல்லாவிட்டாலும் வயது முதிர்ந்தவன். ஆனால் மனைவிமார் இவனோடு சந்தோஷமாய் வாழ்கின்றார்களென்றால் ஒன்று இவனில் ஏதாவது அபூர்வ சக்தியிருக்கவேண்டும். அல்லது இவன் மனைவிமாரை நன்கு பயமுறுத்திவைத்திருக்க வேண்டும். இளமையும் அழகுமுள்ளவர்களானால் இன்னும் பல மனைவிகளைச் சேர்த்துக் கொள்ள இவன் ஆவல் கொண்டிருக்கிறானாம்.

கறுப்பர்களின் அந்தப்புர அழகிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தச் சமீபத்தில் ஐ. நா. சபைநடவடிக்கை மேற்கொண்ட போது இவனது மனைவிகளில் 200 பேர் நடவடிக்கையை எதிர்த்து ஐ. நா. வுக்கு மனுச் செய்தார்கள். இந்த நடவடிக்கை தங்கள் வாழ்க்கைச் சுதந்திரத்தில் தலையிடுவதாகும் என்று இவர்கள் தமது மனுவில் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

''மணவாழ்க்கையில் தலையிடுவது மனித தர்மமா? நாங்கள் ஆனந்தமாய் வாழும் போது மற்றவர்கள் தலையீடு எதற்கு? எங்கள் கணவனைப் பற்றி வெளியே அடிபடும் தவறான செய்திகளை நாங்கள் மறுக்கிறோம். அவர் மிகவும் நல்லவர். எங்களிடம் நல்லதனமாக நடந்து கொள்கிறார், நாங்கள் ஒற்றுமையாக அவரைப் பகிர்ந்து அனுபவிக்கிறோம். எங்கள்குல ஆசாரப்படி நாங்கள் நடந்து கொள்வதில் மற்றவர் தலையீடு எதற்கு?'' என்று அந்த அதிசய மனைவிகள் கேட்கிறார்கள். இதற்கு அன்பா பயமுறுத்தலா காரணம் என்று தெரியவில்லை. குல வழக்கத்தில் ஏன் தலையிடுவானென்று ஐ. நாவும் பின்வாங்கிவிட்டது!

''பொன்''னுடைய அந்தப்புரம் மேலும் பெருகிக்கொண்டே வருகிறது. 'பொன்'னுடைய அதிகாரிகள் அந்தப்புரத்துக்கு அழகிகளைச் சேர்க்கும் முறை வெகுவிசித்திரமானது. முதலில் பெற்றாருடைய விருப்பத்தைப் பெறவேண்டும். வழக்கமாகப் பெற்றோர்கள். இணங்கியே போவார்கள் 'பொன்'னின் அதிகாரிகளை எதிர்க்க இவர்களுக்குத் தைரியமில்லை.

பெற்றோருக்குத் தலைப் பிள்ளையாகப்பிறந்த பெண்களை ''பொன்'' மனைவியாக ஏற்றுக் கொள்ள அரண்மனைச்சட்டம் இடங்கொடுக்கிறது எங்காவது ஒரு அழகிய இளம் பெண் இருந்தால் அந்தப் பெண்ணின் வீட்டுவாசலில் அதிகாரிகள் ஒரு அடையாளத்தைப் பொறித்து விட்டுப் போவார்கள். அதை வீட்டார் கண்டதும் மறுநாள் பொழுது சாய்வதற்குள் அவர்கள் அரண்மனைக்குப் போய்விட வேண்டும். தலைவனுக்குப் பெண்ணைக்கொடுக்க முடியாதபடி ஏதாவது முக்கியகாரணமிருந்தால் அவர்கள் மனுச் செய்யலாம். மனுப் பரிசீலனை செய்யப்படும். காரணம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாயிருந்தால் பெண் திரும்பச் செல்லலாம். ஆனால்.. ஒரு குறிப்பிட்ட தொகையை அவர்கள் அரண்மனைக்குச் செலுத்த வேண்டும்.

ஒரு மணப்பெண்ணின் பெறுமதி இரண்டு பசுக்கள். சில சந்தர்ப்பங்களில் தலைவன் மூன்று பசுக்களைக்கொடுத்து பெண் வாங்குவதுமுண்டு. இங்கு மூன்று பசுக்களின் பெறுமதி அனேகமாக 30 பவுணாகும்.

ஆபிரிக்காவிலுள்ள பெண்ணின் பண்டைய தலைவர்களின் பரம்பரை வழக்கத்தைத் தான் மாற்றியமைக்கக் கூடாதென்றும் தான் அநேக மனைவிகளை வைத்திருக்கும் வழக்கத்தை மாற்றினால் தன் இனம் அழிந்துவிடும் என்றும் இந்தத் தலைவன் கூறுகின்றான். இவனுக்கு எத்தனை பிள்ளைகள் என்று திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை. ஆனால் பிள்ளைகள் ஆயிரக்கணக்கிலிருக்கிறார்கள் என்பதுமட்டும் உண்மை!

# மேல்நாடுகளில் காணும் விநோத வழக்கங்கள்

## பெண்களின் முத்தத்தால் மூர்ச்சையடைந்த வழிப்போக்கன்

உலகிலுள்ள எல்லா மக்களிடையேயும் பாரம்பரிய பழக்க வழக்கங்கள் சில இன்னும் செத்துப் போகாமலிருக்கின்றன. சில 'மிகநல்ல வழக்கமாகவும், வேறு சில' வெறும் அபத்தமாகவும் இருக்கும்,

ஒருதலைக் காதல் கொண்டுமடலேறுதல், உடன் கட்டை ஏறுதல் போன்றவை சட்டரீதியான குற்றமாக்கப்பட்டு விட்டது. இப்பொழுது வேண்டுமானால் இரகசியமாக ஓடிப் போய்க்கிணற்றிலோ ஆற்றிலோ விழலாம். அதுவும் உயிருடன் தப்பிவிட்டால் தற்கொலை முயற்சிக் குற்றம் சாட்டிக் கோட்டிலே நிறுத்திவிடுவார்கள்,

கன்னி கழிந்த பெண்களையே கல்யாணம் செய்யும் வழக்கம் இப்பொழுதும் வடதுருவத்தை அண்டிய நாடுகளில் இருந்து வருகிறது.

ஒரு குடும்பத்தைச்சேர்ந்த அண்ணன் தம்பிகள் பங்காக ஒரு மனைவியை வைத்திருக்கும் வழக்கம் ஒரு வர்க்கத்தினரிடம் இன்றுமிருக்கிறது.

மேல் நாடுகளில் விநோதமான பழக்கங்கள் இருந்தன. திங்கட்கிழமைகளில் ஆண்கள் கூட்டமாகச் சேர்ந்து வீடுவீடாகச் செல்வார்கள். வீட்டிலிருக்கும் பெண்களை இவர்கள் கட்டியணைத்து 'அகோர' முத்தமிடுவார்கள். இவர்கள் பிடியிலிருந்து தப்ப விரும்பும் பெண்கள் முத்தத்துக்கு ஈடாகப் பணம் கொடுக்க வேண்டும். இதில் அதிசயமென்னவென்றால் மனைவி மக்களை முத்தமிடும்போது அந்தக் கூட்டத்தில் அதேவீட்டுத் தலைவனுமிருப்பதுதான்.

மறுநாள் பெண்களின் முறை. புற்றீசல் போல் பெண்கள் கூட்டமாகச் சென்று அகப்படும் ஆடவர்களிடமெல்லாம் முத்தங்களைப் பெறுவார்களாம். ஒரு சமயம் இவர்களிடம் ஒரு வழிப்போக்கன் அகப்பட்டுக் கடைசியில் மயங்கி வீழ்ந்தானாம்..

ஹங்கர் போர்ட், ஹொக்ரைட் கொண்டாட்டத்தின் போது ஆண்கள் கூடைநிறையத் தோடம் பழங்களைச் சுமந்து செல்வார்கள். ஆண்களைக் கண்டதும் ஒரு' பென்னி' யைப் பெற்றுக்கொண்டு ஒரு தோடம் பழத்தைக் கொடுப்பார்கள், பெண்களைக்கண்டதும் ஒரு முத்தத்தைப் பெற்றுக் கொண்டு ஒரு பழத்தைக் கொடுப்பார்கள். வருடாவருடம் நடைபெறும் இந்தக்கொண்டாட்டம் இன்றும் இவர்கள் மத்தியில் நடை பெற்றுவருகிறது.

# திரை மறைவில்

## இரண்டு காரணங்கள்

● சர். ஒலிவர் குணதிலகாவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டதற்கு அரசியல் வட்டாரங்களில் இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றனவாம். சர். ஒலிவரைப் போலத் திறமைசாலியையும் தந்திரசாலியையும் கண்டுபிடிப்பது அரிது என்பது ஒரு காரணம். சர். ஒலிவருக்குப் பதிலாகக் கவர்னர் ஜெனராலாக யாரை நியமிப்பது என்பதில் பெரிய தகராறு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவே ''கிழக் கழுகு', சர். ஒலிவரின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டதாக வேறு சிலர் கூறுகிறார்கள்.

## அடுத்த தேர்தலில் ஒரு கண்

● 'எக்கட்சி பதவிக்கு வந்தாலும் அக்கட்சியில் இடம்பிடித்துக்கொள்ளும்' சோனகர் சங்க ஆயுள் தலைவர் சர். ராசிக் பரீத்தின் மருகன் 'உள்ளூர் சோனி வேண்டாம் வெளியூர்ச் சோனிதான் வேண்டும் புகழ் ஜவாத் இப்பொழுது தொடக்கம் அடுத்த தேர்தலுக்கு வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டாராம்! மார்ச் தேர்தலில் பொத்துவிலில் தோற்கடிக்கப்பட்ட அவர் அடுத்தமுறை கல்முனையில் போட்டியிட முடிவு செய்திருக்கின்றாராம்! 'எல்லாரையும் ஏமாற்றிய' காரியப்பர் அடுத்த தேர்தலில் போட்டியிட முடியாதாகையால் அடுத்த தேர்தலில் அங்கே போட்டியிட முடிவு செய்திருக்கிறாராம். ஜவாத். அவர் ஏற்கனவே கல்முனைக்கு ஒருமுறை போய் வந்துவிட்டதாகவும் கல்முனையிலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது.

## கருத்து மோதல்கள்!

● இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் சில முக்கியமான விஷயங்களில் 'நியமன அங்கத்தவர்' தொண்டமான் கோஷ்டிக்கும் தலைவர் தேர்தலில் தோல்விகண்ட சோமசுந்தரம் கோஷ்டிக்கும் இடையில் பலத்த கருத்து வேறுபாடுகள் இருப்பதாகச் சொல்லிக்கொள்ளப்படுகிறது. செயல் கமிட்டிக்கூட்டங்களில் இவ்விருகோஷ்டிகளுக்குமிடையில் பலத்த போட்டி ஏற்படுவது வழக்கமாகிவிட்டதாம்! தீவிரமான கொள்கையைக் கண்டுபிடிக்கவேண்டுமென்ற கருத்து செயல் கமிட்டியிலுள்ள பல அங்கத்தவர்களிடையே நிலவுகிறதாம்.

## பலமடையும் எட்மண்ட் கோஷ்டி

● லங்கா சமசமாஜக் கட்சிக்குள்ளும் இதே நிலைதான்! மிதவாதி என். எம். கோஷ்டிக்கும் தீவிரவாதி எட்மன்ட் கோஷ்டிக்கும் ஓயாத சண்டை! இப்பொழுது எட்மன்ட் கோஷ்டி பலமடைந்து வருவதாக சமசமாஜக்கட்சி வட்டாரங்களில் சொல்லப்படுகிறது.

## பதிலளிக்கமுடியாத கேள்விகள்

● மந்திரி சபையில் பிளவு இருக்கிறதா என்று உளவறிந்து எழுதுமாறு சில வாசகர்கள் எனக்கு எழுதியுள்ளனர். மந்திரி சபையில் பிளவு இருக்கிறதென்றும் இருகோஷ்டிகள் இயங்குகின்றனவென்றும் எழுதுவதை இப்போதுள்ள தணிக்கை விதிகள் தடைசெய்கின்றன என்பதை அந்த வாசகர்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன். எனவே இதுமாதிரியான கேள்விகளை இப்போதைக்கு என்னிடம்கேளாதீர்கள்.

## புகையிரதச் சீர்கேடு

● இலங்கைப் புகையிரதப் பகுதியினர் காங்கேசந்துறையிலிருந்து காலையில் புறப்படும் ''உத்தரதேவி''யை மீண்டும் ஆரம்பிக்காததன் மர்மம் என்ன? அப்புகையிரதம் இப்பொழுது அனுராதபுரத்திலிருந்து கொழும்பிற்கு வந்து திரும்புகிறது. அது யாழ்ப்பாணம் போய்த் திரும்ப இப்போதுள்ள நேரம் போதும். அப்படியிருந்தும் அச்சேவையை ஆரம்பிக்காததன் காரணமென்ன? அச்சேவையை ஆரம்பிக்காமலே விட்டுவிடுவதுபற்றிப் புகையிரதப்பகுதி யோசனை செய்வதாகக் கூறப்படுவதில் உண்மை ஏதும் உண்டா? புகையிரதப் பகுதியிலுள்ள 'சிக்கன நிபுணர் எவரோ உத்தரதேவியில்லாமலே முத்திய வருமானம் வருவதால் அச்சேவையை நிறுத்துவதால் இலாபம் அதிகம் என்று சிபாரிசு செய்தது உண்மையா? யாழ்ப்பாண மெயில் இருநூற்றிநாற்பது மைல்களைப் பன்னிரண்டு மணித்தியாலங்களில் கடக்கிறது என்ற 'உண்மை' புகையிரத அதிகாரிகட்குத் தெரியுமா?

## களையைப் பாதுகாக்கும் வேலி

● கள்ளச் சாராயம் வாங்கவேண்டுமா? களவாகக் குதிரைப் பந்தயத்திற்குப் பணம் கட்ட வேண்டுமா? பொலீஸ் நிலையம் எங்கே இருக்கிறது என்று கேளுங்கள். அதற்கு அருகில் கள்ளச் சாராயக் கடையையும் குதிரைப் பந்தயம் பிடிக்கும் நிலையங்களையும் பார்க்கலாம் – அனுபவமொழி.

## பலனளிக்காத பேச்சுவார்த்தை

● ப். ப். ப்... பேச்சுவார்த்தை ப்...ப் ..ப் ... பயனளிக்கவில்லையப்பா. த். த். த். தாங்கள் விரும்பிக் கொடுப்பதை ஏ ஏ...ஏ... ஏற்றுக்கொள்ளவேண்டும் ம் ம்...ம்... மற்றவர்கள் வ்...வ் ..வ்... விரும்பினால் எப்பத்தான் ப்...ப்...ப்... பேச்சுவார்த்தை ப்...ப்...ப்... பலனளிக்கும்'' — அரசியலைப் பற்றி அவர் பேசவில்லை; சீதனவிஷயமாய் ஏதோபேசினார்.

## மன்னிப்புக் கிடைக்குமா?

● குளுக்கோஸ் சத்தியாக்கிரகி ராஜரத்தினக்கோனுக்கு மன்னிப்புக் கிடைக்குமா என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் இப்பொழுது முக்கியமாக அடிபடுகிறது. இது பற்றி மந்திரி சபையிலேயே கருத்து வேறுபாடு இருக்கும் போது என்ன நடக்குமென்று நாங்கள் எப்படிக் கூறமுடியும்? மன்னிப்பு அளிக்கவேண்டும் என்பவர்களின் கைதான் இப்பொழுது ஓங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## எதற்காக?

● தெருவில் போகும் பையன் பாடிக்கொண்டுசெல்கிறான்:-
''எதற்காக—எல்லாம்—எதற்காக—அமைச்சரை அழைத்துக் குல்லாப் போடுவது எதற்காக''

## ஆழமான மஜீத்

● ''அறிந்தவன் தான் அறிவான் நிந்தாவூர் மஜீத்தை''
— புதுமொழி.

## சீனியைப் போட!

● போக்குவரத்து அமைச்சர் எம். பி. டி. சற். சிறிவர்த்தன அவர்களுக்கு!

பெரியீர்! பஸ்கட்டணங்களை உயர்த்தும் உத்தேசம் இருக்கிறதாமே. உமது பஸ்களின் பெட்ரோல் டாங்கிகளில் 'சீனியைப் போட'! உமக்கேன் ஐயா உந்தஎண்ணம்?

இப்படிக்கு
நித்தியப பஸ் பிரயாணி

—அம்பலத்துறைவோன்.

# யாழ்ப்பாண வீதிகளுக்கு நவீன பெயர்கள்!

கந்தப்பு 'கலையன்ப'னாகவும், சுப்பையா 'இளவரசு'வாகவும் புதுப்பெயர் பூண்டு பொலிவுடன் உலாவும் இந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்து ஒழுங்கைகள் மட்டும் 'கிடாய் விழுந்தான் லேன்' என்றும், 'வண்ணார் ஒழுங்கை' என்றும் தம் பழைய பெயர்களைச் கட்டிக் காத்துக்கொண்டிருக்கவேண்டுமா? இதைவிட அருவப்பான காரியம் வேறென்ன இருக்கிறது! எனவே அவையும் தம் கோலம் கல்லும்மண்ணும் கிளறிய அலங்கோலமாக இருந்தாலும் பெயரிலே புதுமைகாணத் துடிக்கின்றன. இத்துடிப்பின் விளைவாக மாநகர சபை உத்தேச மறுநாமப் பட்டியல் ஒன்றை இப்போது தயாரித்திருக்கிறது. இதோ அந்த நாமாவளி:

1. மணல்தறை ஒழுங்கை —இராஜ வீதி
2. பளம் ரோட் —பிள்ளையார் வீதி
3. புதுப்பண்டாரக்குள வீதி —சங்கிலியன் வீதி
4. மின்சாரநிலையத் தெள்புற ஒழுங்கை —இராமையா [ஒழுங்கை
5. வண்ணார் லேன் —கனகசபை வீதி
6. விதானை ஒழுங்கை —கந்தப்புராண வீதி

(8-ம் பக்கம்பார்க்க)

# கலியாண மோதிரம் தொலைந்த கதைகள்!

காதலின் அடையாளமாகக் கொடுக்கும் போட்டோவையோ கைலேஞ்சியையோ காதலியோ காதலனோ தொலைத்துவிட்டால் வந்தது மோசம்! அலட்சியமாக எறிந்து விட்டாள்—ஆரிடமோ கொடுத்துவிட்டாள் என்றுதான் எடுத்த எடுப்பில் நினைக்கிறார்கள் வாலிபர்கள். இந்த லட்சணத்தில் நிச்சயதார்த்த மோதிரமே தொலைத்து விட்டால் குடி கெட்டுது. அடகு வைத்து விட்டு வாலிபர்களும், எங்காவது போக்கடித்து விட்டு யுவதிகளும் ஒருவரையொருவர் ஏமாற்றப் பொய் கூறுவது சர்வ சாதாரணம்.

இப்படித்தான் ஒருத்தி பொய்கூறினாள். பாழாய்ப்போன வெண்காயம் காட்டிக்கொடுத்து விட்டது.

'எங்கேமோதிரம்'-கணவன் கேட்டான்.

'மோதிரம் கொஞ்சம் இறுக்கம். மோதிரமிருந்த விரலில் ஒரேசொறி. கழற்றி வைத்திருக்கிறேன்'- இது மனைவி. பாவம் மோதிரத்தைத் தொலைத்து விட்டாள், சொல்லப்பயம்.

குப்பையில் நன்றாக முளைத்து நின்ற வெண்காயச் செடியை 25 வருடங்களுக்குப் பின் ஒரு நாள் பிடுங்கினான் கணவன். வெண்காயம் மோதிரத்தினூடாக இலைவிட்டுநின்றது. கணவனுக்கு விஷயம் புரிந்து விட்டது. ஆனால் ஏற்பட்டது சின்னத் தகராறு தான்.

* *

52 வருடங்களுக்கு முன் திருமணமான ஒரு இளம் பெண் தன்கல்யாண மோதிரத்தைத் தொலைத்து விட்டாள். திருமதி ஜென்னி கார்னர் அம்மையார் இப்பொழுது விதவை. நியூயோர்க்கில்வசிக்கிறார் என்றோ விற்கப்பட்ட இவரது பழையவீட்டில் அந்த மோதிரம் கண்டு பிடிக்கப் பட்டு இவரிடம் சேர்ப்பிக்கப்பட்டது,

* *

ஒருபெண் மாட்டுக்குப் பிண்ணாக்கு வைக்கும் போது மோதிரம் கழன்று பிண்ணாக்குக்குள் வீழ்ந்து விட்டது, மூன்று வருடங்களுக்கு பின் கசாப்புக் கடைக்காரன் அந்த மாட்டை அறுக்கும் போது அதன் வயிற்றுள் அந்த மோதிரம் இருப்பதைக் கண்டுபிடித்து அந்தப் பெண்ணிடம் சேர்த்தான்!

# அடுத்த நாள் கலியாண எழுத்து! - ஆனல்

# மணப் பெண்ணைக் காணவில்லை!

நான் எப்பவும் விடிய முன்னம் எழும்பிவிடுவன், அண்டைக்கும் அப்பிடித் தான் எழும்பி, பக்கத்தில் படுத்திருந்த தங்கத்தைப் பாத்தன். அவளைக் காணயில்லை. 'இண்டைக்கு வெள்ளெண எழும்பி வளவுக்கை போய்விட்டாள் போலை' எண்டு மனசுக்கு ஆறுதலாய் நினைச்சாலும் என்னவோ ஒரு திகிலும் பிடிச்சுக்கொண்டுது. எழும்பிப் போய்க் குசினிப் பக்கம் பாத்தன். அங்கையும் இல்லை. கிணத்தடிப் பக்கம் போய் 'தங்கம், தங்கம்' எண்டு இரண்டு சத்தம் கூப்பிட்டன். ஆர் பதில் சொல்ல?

எனக்குத் தேகமெல்லாம் பதறத் துவங்கி விட்டுது......

* *

தங்கம் என்ரை தங்கச்சி. அவளுக்கும் எனக்கும் இடையிலை நாலு பிள்ளையள் பிறந்து நாலும் மோசம் போவிட்டுதுகள். இவள் சின்னக் குழந்தையாய்இருக்கேக்குள்ளேயே அப்பா அம்மா மோசம் போவிட்டினம். நானும் 'இவ'ருந்தான் இவளைத் தாய் தேப்பன் போலை வைச்சு வளத்து ஆளாக்கினம்.

நாளைக்கு மத்தியானம் இவளுக்குக் கலியாண எழுத்து. எல்லா ஆயத்தமும்செய்தாச்சு. இந்த நேரத்திலை இவள் எங்கை போவிட்டாள்? எனக்கு நெஞ்சு வலிச்சுப் போச்சு. 'இவ'ரிட்டைப் போய்என்னெண்டு இதைச் சொல்லப் போறன்!....சொல்லாமல் இருக்க முடியுமோ? ...கேட்டவுடனை அவர் எப்பிடித் துடிக்கப்போருர்!...கூடப்பிறந்தே என்ரை கழுத்தைச் சமயத்

உத்தியோகம். சொத்துப் பத்தும் கிடக்கு. இவர் தலையிட்ட படியாத்தான் இந்தச் சம்பந்தம் பொருந்தினது. தங்கத்துக்கு விருப்பமோ எண்டு இவர் கேக்கச் சொன்னூர். நான் தான் அவளையென்ன கேக்கிறதெண்டு 'எல்லாம் அவளுக்கு விருப்பந்தான்' எண்டு சொல்லி விட்டன். எல்லாம் பேசி முற்றுன பிறகுதான் அவளைக் கூப்பிட்டுச் சொன்னன். அவளுக்கு மூஞ்சை கறுத்துப் போச்சு. 'என்னடி பேசாமல் இருக்கிருய்?' என்று கேட்டன்.

'நான் இப்ப கலியாணம் முடிக்கயில்லை அக்கா!' எண்டாள். ஏனெண்டு கேட்டன். அவள் ஒண்டும்பேசயில்லை. 'உனக்கென்ன தெரியும் தங்கம்? இந்தமாதிரி ஒரு மாப்பிள்ளை கிடைக்க நீ தவம் செய்திருக்கவேணும். கொத்தான் இருந்தபடியால் தான் பேசி ஒழுங்குபண்ணினூர். நீ வலு சுகமா 'இப்ப கலியாணம் வேண்டாம்' என்ருல் முடியுமோ? உன்னை ஒரு நல்ல இடத்தில் கரைசேர்க்கிற வரைக்கும் எங்களுக்கெல்லோ கவலை' எண்டு நான் சொன்னன்.

அதுக்கும் அவள் மறுமொழி சொல்லயில்லை. கண்ணைத் துடைச்சுக்கொண்டு எழும்பிப் போவிட்டாள். 'பிள்ளையள் சும்மா இப்பிடிக் கலியாணம் வேண்டாமென்று சொல்லிறது உலக வழக்கந்தானே' எண்டு நானும் பிறகு இதைப்பற்றி அவளிட்டைப் பேசயில்லை.

கலியாண எழுத்துக்கு நாள் வைக்கிறதைப்பற்றி

ங்கிவிட்டாள். எனக்கு பாவமாக இருந்தது. கிட்டப்போய் அவளின்ரை கண்ணைத் துடைச்சுப்போட்டு, 'உனக்குக் கூடாததை நாங்கள் செய்வமே தங்கம்? நான் செய்தாலும் கொத்தான் செய்யமாட்டார். உனக்குத் தேப்பனுக்குத் தேப்பனுய் இருந்து அவர்தானே எல்லாம் கவனிக்கிருர். மாப்பிள்ளை நல்ல சிவலை. வடிவான ஆள். உனக்கு ஏத்த சோடி எண்டுதானே ஒழுங்கு செய்திருக்

தங்கமும்நானும்கதைச்சது அவருக்குச் சாடையாய்க் கேட்டு விட்டுது போலை. 'தங்கம் என்னவாம்?' எண்டு கேட்டார்.


'ஒன்டுமில்லை; கலியாணம் முடிச்சா எங்களை விட்டுவிட்டு மாப்பிள்ளை வீட்டுக்குப் போவிட வேணுமே எண்டு நினைச்சு அழுகிருள்' எண்டன்.

அவர் சிரிச்சுப்போட்டு, தங்கத்துக்கும் கேக்கத் தக்கனையா "தங்கம் இப்ப இப்படிச் செல்லுது; கலியாணம் முடிஞ்சுபோன

ராத்திரியும் நான் அயந்து போகையுக்கை குப்புறப்படுத்தபடி என்னமோ படிச்சுக்கொண்டோ எழுதிக்கொண்டோ இருந்தவள்......இப்பிடிச்செய்வாளெண்டு அறிஞ்சா அப்பவே என்னெண்டு பாத்திருப்பன்.........

* *

என்ன செய்யிறதெண்டு தெரியாமல் உடம்பெல்லாம் பதறினபடி இவரைப்போய் எழுப்பினன். இவர் எப்பவும் நல்லா விடிஞ்சபிறகுதான் எழும்பிறவர். நான் தட்டி எழுப்பினதும் 'என்ன ஏது' என்று துடிச்சுக்கொண்டு எழும்பினூர்.



"ராத்திரியும் நான் அயந்து போகையுக்கை அவள் குப்புறப்படுத்தபடி என்னமோ எழுதிக் கொண்டோ படித்துக்கொண்டோ இருந்தவள்... இப்படிச் செய்வாளெண்டு அறிஞ்சா அப்பவே என்னெண்டு ப த்திருப்பன்......"

கிறம். எங்களை விட்டுவிட்டுப் போறதுக்கு உனக்குக் கவலையாயிருக்காக்கும்?... விசரி! எப்பவோ ஒரு நாளைக்கு நீ போகத்தானே வேணும்? நல்ல இடம் வரயுக்குள்ளே விட்டாப்

ஒருநாளைக்கு இஞ்சையும் வந்து நில்லன் எண்டு கேட்டாலும் நிக்குமோ" எண்டு பகிடிபண்ணிவிட்டுப் போவிட்டார்.

* *

இந்த வெள்ளிக்கிழமை கலியாண எழுத்து எழு

'தங்கத்தைக் காணயில்லை' எண்டன்.

'என்ன?' எண்டார்.

நான் என்னத்தைச் சொல்ல?

பாவி, இவ்வளவு பாரதூரமா நினைச்சிருந்தா

# வடிவான மாப்பிள்ளை; நல்ல உத்தியோகம்; ஆனலும் அவள் உதறிவிட்டுப்போனுளே!

தில் அறுத்து விட்டாளே; ......நானும் பிழை விட்டு விட்டன்போலை; அவள் திருப்பித் திருப்பிச் சொன்னாள். நான் அதை ஒரு 'கதை' என்று எடுக்காமல் விட்டு விட்டன். இப்படிச் செய்வாளெண்டு நான் கனவிலும் நினைக்கயில்லையே!

தங்கத்துக்கு 'இவர்' தான் சம்பந்தம் பேசி ஒழுங்கு செய்தவர். இவருக்கு ஒண்டவிட்ட தம்பிமுறை. நல்ல பொடியன். நல்ல

போன கிழமை நானும் 'இவ'ரும் கதைச்சனுங்கள். கதைச்சுப் போட்டு நான் அறைக்குள்ள போக இவள் 'அக்கா' எண்டு கூப்பிட்டாள். 'என்ன தங்கம்?' எண்டன்.

'நான் அப்பவே சொன்னன். நீ கேக்கயில்லை. நான் இப்ப கலியாணம் செய்யேல்லை ....' எண்டு சொல்லிப்போட்டு அழத் துவ

பிறகு .....' எண்டு நான் சொல்லிக் கொண்டிருக்கேக்குள்ளை, 'இஞ்சார், இஞ்சார்!' எண்டு அவர் கூப்பிடுற சத்தம் கேட்டுது. 'ஓ, வாறன்' எண்டு அவருக்குச் சொல்லி விட்டு 'நீ அழாமல் சந்தோசமாய் இருக்கவேணும் தங்கம்' எண்டு இவளுக்கும் சொல்லிப்போட்டு அவரிட்டைப் போனன்.

திறதெண்டு எல்லாம் பேசி முடிவானபிறகு, நேத்தைக்கும் தங்கம் ஒரு மாதிரித்தான் இருந்தாள். இரண்டு மூண்டு தரம் 'அக்கா அக்கா' எண்டு ஏதோ சொல்லிறதுக்கு வந்தவள் பிறகு ஒண்டும் சொல்லாமலே இருந்து விட்டாள். நானும் அதை அவ்வளவு பெரிசு பண்ணுமல் விட்டுவிட்டன்.

ளெண்டு எனக்கென்ன தெரியும்? அப்பவே தெரிஞ்சிருந்தால் இவரிட்டையும் சாடைமாடையாய் செல்லியிருப்பன்... இப்ப என்னெண்டுசொல்லிறது? .....சொல்லாமலும் முடியாது.........

'தனக்கு இப்ப கலியாணம் வேண்டாம் எண்டு இரண்டு மூண்டு தரம் சொன்னவள்......சும்மா

எங்களை விட்டுப்போறு கவலையிலை சொல்லுரு ளெண்டு நினைச்சன்...... இப்ப மோசம் பண்ணி விட்டாளே!...எங்கையன் கிணத்துக்குள்ளை கிணத் துக்குள்ளை......எனக்கு உடம்பெல்லாம் நடுங்குதே......'எண்டு சொல்லி நான் "ஓ"வெண்டு அழத் துவங்கி விட்டன்.

# 'சம்பந்தி வீட்டாருக்கு என்ன பதில் சொல்ல?'

'இவரும் கொஞ்சநேரம் ஒண்டும் தெரியாமல் விறைச்சுப் போயிருந்தவர், நான் குளறத் துவங்கினதும் 'சீ, சும்மாயிரு. அது எங்கை போகப்போகுது?...... நான் பாத்துக் கொண்டு வாறன்' எண்டு சொல்லிப்போட்டு அப்படியே வெளிக்கிட்டுப் போனார்.

போனவர் பத்து மணிக்குப் பிறகுதான் மூஞ்சையைத் தொங்கப்போட்டுக் கொண்டு வீட்டை வந்தார். வளவுக்குள்ளை மரந் தடி கிணறு எல்லாம் தேடிப்போட்டு, மாமன் வீடு. குஞ்சியப்பன் பெரியப்பன் வீடெல்லாம் தேடி அலைஞ்சுபோட்டு வந்திட்டாராம். 'இவளைக் காணயில்லை எண்ட ஏக்கம் ஒருபக்கம். நாளைக்குக் கலியாண எழுத்தெண்டு வரப்போற சம்பந்தி வீட்டுக்காறருக்கு என்ன மறுமொழி சொல்லுறதெண்ட கவலை ஒருபக்கம்..... அவரின்ரை முகத்தைப்பாக்கச் சகிக்கயில்லை. எனக்குக் கையும் ஆடயில்லை, காலும் ஆடயில்லை. இடிச்ச புளிமாதிரி ஒரு மூலையிலை கிடந்து அழுதுகொண்டிருந்தன்.

இதுக்கிடையிலை 'இவ'ருக்கு ஏதோ யோசனை வந்தாப்போலை அறையுக்குள்ளை போய் அவளின்ரை படுக்கையைப் பாத்திருக்கிறார். அவள் படுத்த தலகணிக்குக் கீழை காயிதம் கிடந்திருக்கு. அதைக் கண்டதும் 'இஞ்சார் இஞ்சார்!' எண்டு என்னைக் கூப்பிட்டார். அவர் கூப்பிட்ட அவசரத்தைப் பாத்துவிட்டு நானும் விழுந்தடிச்சுக்கொண்டு ஓடிப் போனன். என்னை இருக்கச் சொல்லிக் காயிதத்தைப் படிச்சுக்காட்டினார்.

"சிவபெருமான் கிருபையை முன்னிட்டு வாழும் என்மேல் என்றும் பட்சம் மறவாத அத்தானுக்கும் அக்காவுக்கும் எழுதிக் கொள்வது:

நான் உங்களுக்குப் பெரிய துரோகம் செய்து விட்டுப் போகிறேன். என்னை மன்னித்துக் கொள்ளும்படி உங்கள் காலில் விழுந்து மன்றாட்டமாய்க் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் இரண்டுபேரும் என்னைப்பெற்ற தாய் தகப்பன் மாதிரி வளர்த்து வந்தீர்கள். என்னுடைய நன்மைக்காகத்தான் கலியாணமும் பேசினீர்கள். ஆனால் உங்களிடம் சொல்ல முடியாமல் நான் ஒரு விஷயத்தை ஒளித்து வைத்து விட்டேன். அது என் மேல் குற்றந்தான். செல்லப்பா மாமாவின் மகன் இராமநாதனும் நானும் படிக்கிறகாலந்தொட்டே அன்பாகப் பழகி, இரண்டு பேரும் திருமணம் செய்வதென்று உறுதி பூண்டிருந்தோம். அவரை விட்டு தான் வேறு இடத்தில் கலியாணம் செய்வதிலும் பார்க்கச் செத்துப் போவது மேல். உங்களிடம் இதை வெளிப்படையாகச் சொல்லாத படியால் உங்களையும் பெரிய வில்லங்கத்தில் மாட்டிவிட்டேன். ஆனாலும் இனியும் பொறுத்திருந்தால் நீங்கள் பேசிய கலியாணம் நடந்துவிடும். நானும் இந்த உயிரை இழக்க வேண்டி வரும். ஆனபடியால்தான் 'அவ'ருக்கு எழுதி, இரகசியமாகச் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி இன்று விடியற் காலையில் கொழும்புக்குப் போகிறோம். அவர் எனக்காக நேற்று வந்து இன்றிரவு காத்திருப்பார். கொழும்பில் நாங்கள் கல்யாணம் செய்து கொள்ளுவோம்.

என்னுடைய தாய் தகப்பனுக்கும் மேலாக நீங்கள் என்னை வளர்த்து ஆளாக்கியதை இந்த ஜன்மத்தில் மறக்கமாட்டேன். நான் செய்த பிழைகள் எல்லாவற்றையும் மன்னித்து விடும்படி மறுபடியும் கேட்டுக் கொள்கிறேன்

இப்படிக்கு
உங்கள் அன்புள்ள,
க. தங்கம்மா.

'இவர்' காயிதத்தை வாசித்துப்போட்டு என்னைப் பாத்தார். அவள் உயிரோடை இருக்கிறாளெண்டதில் எனக்குப் பெரிய ஆறுதல். எண்டாலும் சம்பந்தி வீட்டாருக்கு என்ன பதில் சொல்லிறது, 'இவர்' ஏசப் போறாரே எண்டு நினைச்சுக்கொண்டு பேசாமலிருந்தன்.

இவரும் ஒரு பெருமூச்சு விட்டார். இவருடைய கவலையும் குறைஞ்சுபோச்செண்டு தெரிஞ்சுகொண்டன்.

'இஞ்சார்' நீ கவலைப்படாதை, உங்கினையுக்குள் மோட்டுப் பெட்டையள் போலை அவளும் சீவமோசம் செய்யாமல் தன்ரை காரியம் பார்த்து விட்டாள். எங்கையெண்டாலும் நல்லாயிருக்கட்டும்' எண்டு இவர் சொன்னதும் அந்தச் சீமான்ரை காலைப்பிடிச்சுக் கொண்டு நான் விம்மி விம்மி அழுதன். இப்பிடிப் பெரிய மனசு ஆருக்கு வரும்?

'சம்பந்தி வீட்டுக்காறருக்குஎன்னசொல்லப்போறியள்?' எண்டன்.

'என்ன சொல்லிறது? அது நான் போய் சமாளிச்சுக் கொள்ளுறன். நீ கவலைப்படாமல் இரு' எண்டார் அவர்.

அண்டைக்குப் பொழுதுபட தங்கத்தின் தந்தியும் வந்தது, சுகமாய்ப் போய்க் கொழும்பு சேர்ந்தோமெண்டு.


என்ன இருந்தாலும் எங்கடை 'இவ'ரின்ரை குணத்தை நினைச்சா எனக்கு இப்பவும் அழுகை வந்துவிடும்.

அப்பிடி ஒரு மனிசன் அவர்! — விநோதன்

[கதையும் படமும் கற்பனை]

## மிஸிஸ் கடிறவேலின் சொட்டைகள்!

— சிவாஜி



## அதிசயமான வெந்நீர் ஊற்றுக்கள்!

எங்கள் இலங்கையிலே திருகோணமலைக்குச் சமீபத்தில் கன்னியாவில் உள்ள வென்னீர்க் கிணறுகளைப்பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். ஒவ்வொன்றும் வெவ்வேறு வெப்ப நிலையிலுள்ள ஏழு கிணறுகள் பக்கத்துக்குப் பக்கத்தில் இருப்பது அதிசயந்தான்.

இப்படியான வென்னீர் ஊற்றுக்களும், இவற்றை விட மகா விசித்திரமான ஊற்றுக்களும் உலகின் பிறஇடங்களில் இருப்பது உங்களுக்குத் தெரியுமா?

வடதுருவ நாடுகளில் வெந்நீர் ஊற்றுக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அமெரிக்காவில் வையோமிங் மாகாணத்தில் 'மஞ்சள்பாறைத் தேசியப்பூங்காவில்' பல வெந்நீர் ஊற்றுக்கள் உள்ளன. இவை ஆகாயத்தை நோக்கிப் பூவிறிசு வாணம்போல வெந்நீரை வீசிக் கொண்டிருக்கின்றன. இங்குள்ள ஒரு ஊற்று 63 நிமிடங்களுக்கு ஒருமுறை 150 அடி உயரத்துக்கு வெந்நீரை வீசுகின்றன!

கலிபோணியாவிலுள்ள தேசியப்பூங்காவில் சேற்றுடன் கலந்த வெந்நீரூற்றுக்கள் இருக்கின்றன. ஐஸ்லாந்திலுள்ள வெந்நீரூற்றுக்களில் முட்டைகளை அவிக்கலாம்! அப்படிக் கொதித்துக்கொண்டிருக்கின்றன.

நியூசிலாந்து யப்பான் இடங்களில் உள்ளவர்கள் கெட்டிக்காரர்கள். இவர்கள் வெந்நீர் ஊற்றுக்களை குழாய்கள் மூலமாக எடுத்துவீட்டுத்தேவைகளுக்கு உபயோகிக்கிறார்கள்!

# உலக நடப்பு

[கிருஷ்ணபிள்ளை மாஸ்டரும் சின்னையா அண்ணையும்]

சின்னையா அண்ணை: மாஸ்ரர் என்னமாதிரியிருக்கு உலகத்திலை சமாதானவிஷயம்? கெனடியும், குருசேவும் ஆளை ஆள் வெருட்டுகிருன்கள் போலை?

கிருஷ்ணபிள்ளைமாஸ்ரர்: சரியாய்ச் சொன்னியள்! ஒருத்தனை யொருத்தன் விட்டுக் கொடுக்காமல் வெருட்டுகிருன்கள் தான்! இரண்டு விஷயங்களில் இரண்டு பேருக்குமிடையில் ஒருமாதிரி இறுகிக் கொண்டு வருகிறது. ஒன்று ஜெர்மன் பிரச்சினை—

சின்: குருசேவ் ஜெர்மனியை என்ன செய்யப் போருனும்?

கிரு: கிழக்கு ஜெர்மனியோடை இன்னும் ஆறுமாசத்துக்குள் மற்ற வல்லரசுகள் ஒன்றுசேராவிட்டாலும் தனியே தான் ஒப்பந்தஞ் செய்வேன் என்று எச்சரிக்கை செய்திருக்கிருன்!

சின்: அப்படிச்செய்தால் கெனடியாட்களுக்கு என்ன? கிழக்கு ஜெர்மனி கொம்யூனிச நாடாயிருக்கிறபடியால், ரூசியாவின் ஆதிக்கம்கூடிவிடுமெண்டு பயப்பிடுகினமோ?

கிரு: அதேதான்! மேற்கு ஜெர்மனியில் இவையை ஆதரிக்கிறஅரசாங்கந்தான், டொக்டர் அடனேரினுடையது. அதோடை, பெர்லின் நகரத்திலும்—அது கிழக்கு ஜெர்மனியின் எல்லைக்குள் இருக்குது, மேற்கு நாடுகளை ஆதரிக்கிற முப்பது லட்சத்துக்குமேலை சனமிருக்கு, இவையினுடைய ஆதிக்கத்தில்—அந்தச்சனங்களை தாங்கள் பாதுகாக்கவேண்டியிருக்கலாம்.

சின்: அதுசரி மாஸ்டர், இரண்டாவது உலகயுத்தம் முடிஞ்சு இப்பபதினறுவருசமாகுது. ஜெர்மனி ஒற்றுமையடையாதபடி இவன்கள்எவ்வளவு நாட்கள்வைச்சிருக்கப்போருன்கள்

கிரு: அதுதான்அண்ணை விசயம் – இவன்கள் சும்மா ஜெர்மன் ஒற்றுமையைப்பற்றி ஏதோ கதைக்கிருன்கள் என்ருலும், உண்மையில் அதை அவன்கள் விரும்பமாட்டான்கள் என்றுதான் சொல்லவேணும்.

சின்: அது நியாயந்தானே! மற்றது என்ன விசயம் எண்டனீங்கள் மாஸ்டர், இவை இரண்டுபேருக்கையும்?

கிரு: அது ஆக வேடிக்கையண்ணை! ஜெனிவாவில் இப்பசில மாசமாய் நடந்துவந்த வாயுக்குண்டுபரீட்சைத்தடை சம்பந்தமானபேச்சுவார்த்தைகள் இரண்டு பகுதியாரும் உலகசமாதானத்திலைவிருப்பமென்று காட்டுகிறதுக்கு-இப்ப ஏதோ திடீர் என்று குருசேவ் ஒரு குண்டு போட்டிருக்கிருன்-படைக்குறைப்பு மூலமாய்த்தான் உண்மையான உலகசமாதானத்தை நிலைநாட்டலாம். அந்த விசயத்தோடை, "இந்த பரீட்சைத்தடை விஷயத்தையும் சேர்த்துக்கொள்ள வேணும் என்று சொல்லியிருக்கிருன்.

சின்: இதுக்குள்ளை வேறை ஏதும் இரகசியம் இருக்குமோ?

கிரு: பலமாதிரியும் சொல்லுருங்கள்-ருசியா ரகசியமாய்இந்தக்குண்டு பரீட்சைகளை நடத்தி வந்திருக்கலாம் என்று கெனடிசந்தேகித்திருக்கிருர்-அது மட்டுமில்லாமல், 'நியூட்ரோன்' குண்டென்று ஒரு புதுக்குண்டை ரஷ்யா கண்டுபிடிச்சுக்கொண்டிருக்கிறது-அதைச் சோதிச்சுப் பார்க்கிறதுக்குத்தான் இந்தமாதிரி, ஒரு கண்துடைப்பு விட்டிருக்கிருன் குருஷேவ் என்று சொல்லுகிருன்கள். நீ சொன்ன மாதிரி இதிலை ரகசியம் இல்லாமல் இருக்காது.

சின்: அதுசரி நீங்கள்ஏதோ கொங்கோ எல்லாம் சீர் திருந்திவிட்டுது எண்டியள்-சோம்பே தொப்பியைப் பிரட்டிப் போட்டானும்!

கிரு; ஓம் அண்ணை, அவன் தன்ரை தலைநகரத்துக்குத் திரும்பினவுடனை, கடங்கா தனி நாடாகவே இருக்கும் என்று சொல்லியிருக்கிருன். அவன் கொஞ்சம் அதிகாரத்தை விரும்புகிருன்போலை தெரியிது. இருந்தாலும் மொபுட்டு கடங்கா போயிருக்கிருனும், இரண்டு பகுதிகளின் இராணுவங்களையும் ஒன்று சேர்க்கும் விசயத்தைப்பற்றிப் பேச-என்ன நடக்கும் என்று சொல்லத்தெரியவில்லை.

சின்: ஐ. நா. அங்கே என்ன செய்யுது, லுமும்பாவைப்போலை, கிசங்காவையும் கொல்ல உதவி செய்யினமோ?

கிரு: கிசங்கா கேட்டதற்கிணங்கத்தான், பாராளுமன்றம் விசேஷமாய்க் கூடும் ஒரு சர்வகலாசாலைப்பகுதியை அரண் செய்வதிலை பெருந்தொகையான காசைச் செலவளிச்சுப் போட்டுது. ஐ. நா. காவலுக்கென்று விசேசபயிற்சி பெற்ற சுவீடின் தேசத்து பொலிஸ் நாய்களுக்கே 200லட்சம் டொலர் செலவளியுதாம், நாளொன்றுக்கு! அப்படியிருந்தும், பாராளுமன்றம் கூடுவது நம்பிக்கையில்லையாம்.

சின்: ஈராக்குக்கும், வெள்ளைக்காரனுக்கும், சண்டை வரப் போகுதெண்டு சொல்ருன்கள் உண்மையே மாஸ்டர்?

கிரு: குவெய்ற்றைப்பாதுகாப்பதே தன் கடமையென்று சொல்லிப் படைகளை அங்கே யனுப்பிக்கொண்டிருக்குது பிரிட்டன். எண்டாலும் லேசிலை போருக்கிறங்காதுபோலதான் தெரியுது.

சின்: ஈராக்குக்கு ஆரும் உதவி செய்யிறம் என்டிருக்கின்ருன்களே?

கிரு: இப்ப அப்பிடியொருத்தரும் சொல்லவில்லை. அரபு நாடுகளே ஈராக்கினுடைய கட்சியை ஆதரியாதுபோலை தெரியுது—தங்களினுடைய ஒற்றுமையைக் குலைக்கிறதுக்கு இங்கிலாந்து திட்டம் போடுது என்று சும்மா கண்டிச்சிருக்கிருன்கள், மற்றும்படி, இந்தியா போன்ற மற்றநாடுகள், ஈராக்கை சமாதானவழியிலேயே நடந்துகொள்ளவேணும்என்று வேண்டியிருக்குதுகள். ஈராக் கூட, அப்படித்தான் சொல்லுது. ஆனபடியால், இப்போதைக்கு யுத்தம் வரும்போலை தெரியவில்லை.

சின்: எண்டாலும் மாஸ்டர் நேரு சொன்ன மாதிரி இந்த உலகம் நாளுக்கு நாள் சீரழிஞ்சுகொண்டுதான் வருகுது. வாறன் மாஸ்டர், சந்தோஷம்.

# ஸ்ரீகாந்தாமீது 'தோழர்க'ளின் காதல்!

## தூபம் போடும் அந்தரங்கம் என்ன?

மக்களின் வெறுப்புக்கு மதிப்புக்கொடுத்து யாழ்ப்பாணத்தை விட்டு இடம்பெயர்ந்த திருவாளர் எம். ஸ்ரீகாந்தா சி. சி. எஸ். மீது இங்குள்ள கொம்யூனிஸ்ட் தோழர்களுக்குப் புதுக்காதல் பிறந்திருக்கிறது. இதனுல் சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் அவர் மீது போற்றித் திரு அகவல் பாடிப் பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றுவதைத் தோழர்கள் ஒரு தந்திரச் செயலாகக் கையாண்டு வருகிருர்கள். தீர்மானத்தில் "ஐக்கிய இலங்கை உருவாக்கப் பாடுபட்ட பெரியார்" என்ற வார்த்தைகள் நிச்சயமாக இடம் பெறுவதைக் காணலாம்.

புறமுதுகிட்டோடிய பின், முதல் தடவையாக திரு. ஸ்ரீகாந்தா அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தாரல்லவா? அவரைக் கம்யூனிஸ்ட் தோழர் திரு. பொன்னம்பலம் தனிமையில் சந்தித்து நீண்ட நேரம் மனம் விட்டுப்பேசினுராம். சம்பாஷணையில் முழுக்க முழுக்க அரசியல் விவகாரமே இடம் பெற்றதெனவும் எதற்கோ தூபம்போட அங்கு அத்திவாரமிடப்பட்ட தென்றும் அந்தரங்கத்தகவல் ஒன்று எட்டியிருக்கிறது.

# ஆயுள்வேத வைத்திய போலித் தராதரப் பத்திரங்கள் கட்டுக்கட்டாகக் கிடந்தன!

ஏமாற்றுவதற்கும் புதுப் புது வழிகளைக் கண்டு பிடித்தபடியே யிருக்கிருர்கள், இலங்கையின் நல்ல பிரஜைகள். ஆயுள்வேத வைத்தியத் தராதரப் பத்திரம் பெற்றுத்தருவதாக ஏமாற்றும் புதுவழியைக் கண்டுபிடித்தார் கரைத்துறையைச் சேர்ந்த என், குணரத்தின. ஆனுல் எல்லாரையும் எல்லா நேரமும் ஏமாற்ற முடியாது. எல்லாரையும் ஏமாற்ற முயன்றதால் பாண்ந்துறைக் கோட்டில் வந்து முடிந்தார் அவர்.

அவர் கைக்கொண்ட தந்திரம் இதுதான். தராதரப் பத்திரமில்லாமல்இருக்கும் ஆயுள்வேதவைத்தியர்களுக்கு இந்தியாவிலிருந்து தராதரப் பத்திரம் பெற்றுத் தருவதாகக்கூறி ஆயுள்வேத வைத்தியர்களிடமிருந்து பணத்தைப் பெற்ருர். இதைச் செய்வதற்காகத் தன்னை டாக்டர். எஸ். குணரத்தின என்றுகூறிக்கொண்டதோடல்லாமல் இந்திய ஹோமியோபதி வைத்திய கலாசாலையினதும் அஷ்டாங்க ஆயுள்வேத சங்கத்தினதும் பிரதிநிதியெனத் தன்னைக் கூறிக்கொண்டார். பணத்தைப் பெற்றுக்கொண்டு போலித் தராதரப் பத்திரங்களை அனுப்பி வைத்தார்.

இச்சூழ்ச்சியில் சிக்கிய இரு வைத்தியர்கள் புகார் செய்ததன் பேரில் பொலிசார் அவரைக் கைதுசெய்து வழக்குத் தொடர்ந்தனர். குணரத்தினவின் வீட்டில் கண்டு பிடிக்கப்பட்ட ஏராளமான போலிப் பத்திரங்களும் கோட்டில் தாக்கல் செய்யப்பட்டன. எதிரி ஆயிரம் ரூபா பிணையில்விடப்பட்டார். விசாரணை வேறு திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

# யாழ்ப்பாண வீதிகளுக்கு நவீன பெயர்கள்

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

7. செம்பாட்டு ஒழுங்கை—இந்துமகளிர் ஒழுங்கை
8. ஸ்கூல் லேன்—உருத்திரா லேன்
9. பண்டாரக்குளம் ஒழுங்கை—இராணி வீதி
10. சின்னக்கிணறு ஒழுங்கை—ஸ்ரீவாதநிழல் வீதி
11. ஸ்ரான்லிமுன் ஒழுங்கை—புவனம்நிழல் வீதி
12. பாணன்குளம் தெற்கு ஒழுங்கை — ஞானப்பிரகாசம் லேன்
13. சின்னக்கண்டு ஒழுங்கை—முத்துச்சாமி ஒழுங்கை
14. ஆத்திக்காடு வீதி—பொன்னம்பலம் வீதி.
15. இராசேஸ்வரி-திருமகள் இணைப்பு ஒழுங்கை —தந்தையா லேன்





● 'மில்க்வைற் நீலசோப்'
• உங்கள் சலவை வேலையைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்கிறது
● 'மில்க்வைற் நீல சோப்'
என்று கேட்டு வாங்குங்கள்

சென்றவாரத் தொடர்ச்சி

# காதல் மன்னன் ஏரல்பிளின்

ஆங்கிலத் திரைஉலகின் காதல் மன்னனான ஏரல் பிளினின் விசித்திர வாழ்க்கையைப்பற்றி அவனுடைய மனைவி நோரரா கூறுகிறாள்: 'தூக்கத்துக்கு ஊசிபோடும் வழக்கத்தைக் கண்டித்துப் பேசினேன். வந்தது ஆபத்து' எனக்கே அந்த ஊசியைப் போட்டுவிடுவதற்காக என்னை விட்டுத்துரத்தினார். மன்றாடினேன், பலிக்கவில்லை. என்னை வீழ்த்தி, வயிற்றின்மேல் ஒரு காலை வைத்துக்கொண்டு ஊசிபோட முயன்றார்......'

நான் அவளுடைய தலைமயிரைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு திமிறினேன். அவர் நிலை தடுமாறி வீழ்ந்தார். ஊசி எங்கோ வீழ்ந்து விட்டது. நான் மேல் மாடிக்கு ஓடினேன். அவர் துரத்தி வந்து பிடித்துவிட்டார். விடுங்கள் என்று அலறினேன். ஆத்திரத்தோடு ஓங்கி என்னை அறைந்தார். அடி முகத்தில் படாதிருக்கக் கையைக் கொடுத்துத் தடுத்தேன். என் கட்டை விரல் முறிந்துவிட்டது. மயங்கி வீழ்ந்துவிட்டேன். நான் மறுபடி கண் விழித்தபோது அவர் பக்கத்திலிருந்தார்.

"என்னவேலை செய்துவிட்டேன்......என்னை மன்னித்துவிடு கண்ணே, பைத்தியக்காரனைப்போல் நடந்துவிட்டேன்" குழந்தையைப்போலத் தேம்பித் தேம்பி அழுதார். ஏனோ பைத்தியக் காரியைப் போல் அவரை மறுபடியும் ஆதரவோடு அணுகத்தான் செய்தேன்.

## தற்கொலை முயற்சி

இப்படி எத்தனையெத்தனை சம்பவங்கள்! எவ்வளவு காலத்துக்குத்தான் இவற்றைச்சகித்துக்கொண்டிருக்கலாம். வாழ்க்கையிலேயே வெறுப்பேற்பட்டது. ஒருநாள் அளவுக்கு அதிகமான தூக்க மாத்திரைகளைப் போட்டேன் தற்கொலை செய்வதற்காக. ஏரல் துடிதுடித்துவிட்டார். டாக்டர் தன்னாலான முயற்சிகளைச் செய்து என்னைப் பிழைக்க வைத்துவிட்டார். ஏரல் கண்ணீர் மல்க என் முன்னே வந்து நின்றார்! 'என்னை ஏமாற்றி விடப்பார்த்தாயே' என்று அழுதார். ஆனால் இம்முறை என் உள்ளம் கல்லாகவிருந்தது.

## பிரிவு

'நான் உங்களை விட்டுப் பிரிந்து செல்லப் போகிறேன்' என்று ஏரலிடம் கூறினேன். அவர் பதில் கூறாது சிறிதுநேரம் என்னையே பார்த்துக்கொண்டு நின்றார். பின் கூறினார்:

"இன்னமும் நான்உன்னைக் காதலிக்கிறேன். எப்பொழுது என்னிடம் போக வேண்டுமென்று நீ நினைக்கிறாயோ அப்பொழுது திரும்பிவா."

நான்சென்று வேறொருவீட்டில் குடியேறினேன். ஏரல் தினமும் ஏதாவது ஒரு பரிசு எனக்கு அனுப்பிக்கொண்டேயிருந்தார். உண்மையைக்கூறினால் நான் இன்னும் அவரைக் காதலித்தேன்.

## மறுமணம்

தனியாகக் குடி வந்தபின் டிக்ஹேம்ஸ் என்ற ஒருவரின் பழக்கம் எனக்கு ஏற்பட்டது. இவர் மிகவும் நல்லவர். குடிப் பழக்கம் கிடையாது. உரத்து ஒருநாளும் பேசமாட்டார். மிகவும் சாதுவான மனிதர். இந்த விஷயத்தை ஏரலிடம் கூறிவிவாகரத்துச்செய்வோம் என்றேன். ஏரல் ஒன்றும்பேசாமல் என்னை அணைத்துமுத்தமிட்டார். "உன் இஷ்டம் போல் செய். ஆனால் பிள்ளையை என்னிடம் தா," என்று கோரினார். அவர் கோரிக்கையை என்னால் மறுக்க முடியவில்லை.

புதுக் கணவனை ரிச்சேட் என்று ஆசைப் பெயரிட்டு அழைத்தேன். ஆனால் அவரோடு மூன்று வருடங்கள்தான் வாழ்ந்தேன். அவரைப்பற்றித்தவறாகக் கூறுவதற்கு ஒன்றுமில்லை. மிகவும்நல்லவர். அப்பாவி. உரத்துப் பேசாதவர் எப்படி அடிப்பார்! அதனால் தானோ என்னவோ மூன்று வருடங்களில் நாங்கள் வாழ்வு கசந்து விவாகரத்துச் செய்து கொண்டோம்.

## மறைவு

பலரோடு பழகினேன். யாரையும் என்னால் காதலிக்க முடியவில்லை. ஏரலோடுவாழ்ந்த பெண் வேறொருவனோடு வாழ்வது கடினந்தான். ஏரல் ஒரு தனிப்பிறவி. அவர் செய்த உபத்திரவங்களில் ஒரு தனி இன்பமிருந்தது. இதை அப்பொழுது உணர்வது கடினம்.

ஐந்து வருடங்களுக்குப்பின்—அதாவது 1958 ம் வருடம் ஏரல்பிளினை மறுபடியும் சந்தித்தேன். பெவர்லி என்றோர் யுவதியைப்பற்றி அவர் என்னிடம் கூறினார். 'அவள் சதா என்னைச் சிரிக்கச் செய்கிறாள், இன்பமாக இருக்கச் செய்கிறாள்' என்றார்.

"அதையே நீங்கள் விரும்பினால், நல்லதுதானே" என்றேன். எனக்குத் தெரியும் அவர் விரும்புதெல்லாம் ஒரு தனிரகமென்று.

"நான் விரும்புவது எத்தகையை வாழ்க்கை என்பதை உன்னைத் தவிர அதிகமாக அறிந்தவர் வேறுயார் இருக்க முடியும்......" இதைச் சொல்லும்போது அவர் என்னைக் கட்டியணைத்தபடியேகூறினார். "ஆனால்....என்னால் இனி ஒன்றும் செய்ய முடியாது......" என்னை முத்தமிட்டார். அவர் கண்களில் மரணம் நிழலாடியது.

மறுவருடம்—1959-ம் வருடம் ஒக்ரோபர் 14-ம் திகதி எரல்பிளின் இறந்துவிட்டார்.

35 வயது தொடக்கம் 41வயது வரைதான் அவரது வாழ்க்கை சோபித்தது. அந்தக்காலத்தில் நான் அவருடன் வாழ்க்கை நடத்தினேன். நான் இப்பொழுது அழவில்லை. என் கண்ணீர் எப்பொழுதோ வற்றிவிட்டது!

# பல்சுவைப் புதினம்

'ரமணன்' தொகுத்தது

### உணவின்றித் தத்தளித்த ஜனாதிபதி!

இன்றைக்கு இந்தஉலகிலேயேபுதுச்சரித்திரத்தை உண்டு பண்ணிக் கொண்டிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி திரு. கெனடி மூன்று நாட்களாக உண்ணுவதற்குணவின்றி தத்தளித்தார் என்றால் உங்களால் வாயைப்பிளக்காமல் என்னதான் செய்யமுடியும்?

ஆமாம்! இவர் தனது இருபதாவதுவயதில் இராணுவத்தில் கடமையாற்றும் பொழுது இவரது சகாக்களும் ஒரு இராணுவக்கப்பலில் பிரயாணம் செய்தார்கள். காத்திராப் பிரகாரமாய் இவர்கள் சென்ற கப்பல் கடலில் மூழ்க நேரிட்டது. அதில் சென்ற பதினைந்து நபர்களில்எட்டுப்பேர் மாண்டுவிட்டனர். மிகுதியானஏழுபேரும் கப்பலின் பலகைகளில் மிதந்து கொண்டு கரை சேர்ந்தார்களாம். பின்னர் அவர்கள் தமது முகாமிற்கு செல்ல மூன்று நாட்கள் சென்றன. அதுவரைக்கும் செல்வச்சீமான் கெனடி ஒரே பட்டினி.

### பணஉதவி எதற்கு?

யாழ்ப்பாணத்தில் என்னத்திற்குக் குறைவிருந்தாலும் சேக்கஸ், காணிவல் போன்றவைக்கு ஒரு போதும் குறைவேற்படாது. ஒரு முறை சேக்கஸ் விளம்பரகர்த்தாபின் வருமாறுகத்திக் கொண்டு சென்றான்:

'சேக்கஸ்! சேக்கஸ்! பயங்கர சேக்கஸ்! அறுபதுஅடி உயரத்தில் கம்பியில் ஒருவன் நடக்கிறான்! பிரவேசக்கட்டணமில்லை! ஆனால்இறுதியில்ஏதாவது சொற்ப பணம் உதவ வேண்டும்!'

வீதியில் ஒருவர்: எதற்காக?

விளம்பரகர்த்தர்: கம்பியில் நடப்பவன் விழுந்தவுடன் 'புக்கை' கட்டுவதற்கு!

### பேர்னாட்ஷாவின் கிறுக்கு

நோபல் பரிசு பெற்ற அறிஞர் பேர்னாட்ஷாவை தெரியுமல்லவா உங்களுக்கு?

அவர் மிகவும் கிறுக்குப் பிடித்தவர்! யாருக்கும் அவரது மனம் பயப்படாது. தான் மக்களை மதிக்கத் தேவையில்லை என்றும் மக்கள் தான் தன்னை மதித்து அடிபணியவேண்டும் என்றும் பல இடங்களில் எழுதியும் பேசியும் இருக்கிறார்! சோஷலிசம், கொம்யூனிசம் என்ற இரண்டு சொல்லிற்கும்இடையிலுள்ள வித்தியாசத்தை விளக்கும் பொழுது பின்வருமாறு எழுதுகிறார்:

'இதன் பொருள் மிகவும் எளியதே. ஆனால் உலகிலேயே இதை உணர்ந்தவர்கள் இருவர்தான் இருக்கின்றனர். அந்த இருவரில் ஒருவர் அதை உண்டு பண்ணிய ஸ்டாலின். மற்றொருவர் நான்!" பாருங்களேன் அவர் கிறுக்கை!

### நவீன கும்பகர்ணன்!

ராமாயணத்தில்கம்பர், கும்பகர்ணனின் உயரம் நாற்பதுஅடி என்றால் அது கம்பரின் கயிறு திரிப்பு என்று சொல்வதற்கு இங்கு நாற்பதல்ல நாற்பதினாயிரம்மக்களுக்குமேல் இருக்கிறார்கள். ஆனால் தற்பொழுது கூட அந்தளவு உயர மனிதர்கள் வாழ்கிறார்கள் என்றால் அவர்கள் எல்லோரும் மூக்கிலே தான் விரல் வைக்கவேண்டும்.

1958-ம் ஆண்டு அமேசன் நதிக்கரையில் ஒரு செம்படவர் கூட்டம் போய்க் கொண்டிருந்ததாம். குரங்கு ஒன்று கீச்சிடும் சத்தத்தைக்கேட்டு அவர்கள் குரல் வந்த திக்கை நோக்கினார்கள். சுமார் நாற்பதடி உயரமுள்ள மனிதனொருவன் ஒரு குரங்கை பிடித்துப் புசித்துக் கொண்டிருந்தான்.

அவ்வளவு தான்! அந்த செம்படவர் கூட்டம் கூச்சலிட்டுக் கொண்டு ஓடியது. பின்னர் அவர்கள் ஆயுதபாணிகளாக வந்து பார்க்கும் பொது அந்த நாற்பதடி மனிதன் அங்கு நின்றால்தானே!

# 'ஹோஸ்பவர்' என்றால் என்ன?

குதிரைப் பலம் (ஹோஸ் பவர்) என்கிறோமே, அது எப்படிக் கணக்கிடப்படுகிறதெனத்தெரியுமா? சிலர் ஒரு குதிரையின் முழுப் பலத்தைத்தான் "குதிரைப்பலம்" என்று குறிப்பிடுகிறார்கள் எனநினைக்கிறார்கள். உண்மை அதுவல்ல. தைரியமான ஒரு குதிரையின் முழுப்பலம் $\frac{4}{5}$ ஹோஸ் பவராகும். சராசரி மனிதனின் முழுப் பலம் எட்டிலொரு ஹோஸ் பவராகும்.

ஒரு நிமிஷத்தில் ஒரு அடி உயரத்துக்கு 33ஆயிரம் றாத்தல் எடையைத் தூக்கத் தேவைப் படும் சக்தியே ஒரு ஹோஸ் பவர் என்றுபிரிட்டனில் கணிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கு ஆங்கிலியன் தேவாலயத்திலுள்ள பெரிய மணிக்கூண்டை ஒன்பது நாட்களுக்கு ஓடக் கூடியதாகக் "கீ" கொடுக்க ஏழிலொரு ஹோஸ் பவர் தேவையெனச் சமீபத்தில் கணக்கெடுத்தார்கள்.

### கீழிருந்து மேலே...

பைத்தியக்கார ஆஸ்பத்திரி மேல்மாடிக்கு டாக்டர் தனியனாகச்சென்ற போது சில பைத்தியங்கள் அவரைச் சூழ்ந்து கொண்டன. அவர்கள்எல்லோருமாகச் சேர்ந்து படிவழியாகக் கீழிறங்கிச் செல்லாமல் மேலேயிருந்து கீழே குதிக்கும்படி டாக்டரை வற்புறுத்தத் தொடங்கினர். டாக்டர்பாடு திண்டாட்டமாகி விட்டது. சிந்தித்தார். ஒருமாதிரியாகஅவருக்கு ஒருவழி புலப்பட்டது சத்தம் போட்டுக் கொண்டு அவரைச் சூழ்ந்துநின்றபைத்தியங்களைக் கையமர்த்திவிட்டு "மேலேயிருந்து கீழே குதிப்பது பிரமாதமான காரியமல்ல. படிவழியாக ஏறாமல் ஒரே துள்ளலில், கீழிருந்து மேலே ஏறவேண்டும். என்னால் அது முடியும்." என்று சொன்னார்.

பைத்தியங்கள் அவரை அப்படிச்செய்துகாட்டுமாறு வேண்டின. டாக்டர் கீழே இறங்கினார். பின் தனியனாக மேலேசெல்ல அவருக்கென்ன பைத்தியமா?

# "திருமதி பிள்ளை கதை வசனம் எழுதுகிறார் நாங்கள் சினிமாப் படம் எடுக்கிறோம்"—என்றவிதமாக

## சினிமாத்தயாரிப்பாளர்கள் உலாவுகிறார்கள்!

### இவர்களிடம் ஏமாறும் இளம்பெண்கள்!



'நாய் செய்த பாக்கியம் நாம் செய்யவில்லையே என்று நினைக்கிறீர்களா?' என் செய்வது! அது அதன் தலையெழுத்து. (திரையழகி ஜமுனவும் அவர் ஆசையோடு வளர்க்கும் நாய்க்குட்டிகளும்.)

பணம், அனுபவம், ஆற்றல் மிக்க தென்னக சினிமாப்படத் தயாரிப்பாளர்கள் பலமுறை சறுக்கிவிழுகிறார்கள். சில படங்களே லாபமீட்டிக் கொடுக்கின்றன. இவர்களது படங்கள், இந்தியா, இலங்கை, பர்மா, சிங்கப்பூர், தென் ஆபிரிக்கா, ஆகிய இடங்களிலெல்லாம் ஓடுகின்றன. இந்த நிலையில் இலங்கையில் தமிழ்ப் படங்களைத் தயாரிப்பதானால் தென்னகத்தோடு போட்டியிடக்கூடிய திறமை இவர்களிடமிருக்க வேண்டும். இவ்வாறு கூறிமுயற்சிப்பவர்களது உற்சாகத்தைக் குறைப்பது நமது நோக்கமல்ல. நன்றாக முயற்சிக்கட்டும். இந்த முயற்சியின் பயனாகப் பலர் ஏமாறக் கூடாதே என்பதுதான் எமது நோக்கம். நடிகர்கள் லட்சக் கணக்கில் பணம் வாங்கும் இந்த நாளில் இங்கு நடிகர்களிடம் படம் தயாரிக்கப் போவதாக ஆசை வார்த்தை கூறிப் பணம் கேட்கிறார்கள் என்றசெய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது. படத்தில் நடிக்க வேண்டுமென்ற ஆசையில் சில பெண்கள் பலரிடம் பல்லுக் காட்டுகிறார்களாம்! இவர்களெல்லாம் கொஞ்சம் உசாராயிருக்க வேண்டும்.

சிலகாலத்துக்கு முன், "திருமதி பிள்ளை கதை வசனம் எழுதுகிறார், நாம் சினிமாப் படம் பிடிக்கப் போகிறோம்" என்று சிலர் கூறிக்கொண்டு திரிந்தார்கள். 'நவலோகம்' சமுதாயம் புரட்சிஎன்றெல்லாம் படம் பிடிக்கப் போவதாகப் பேச்சடிபட்டது. 'தோட்டக்காரி துரிதமாக முன்னேறுகிறாள்' என்றெல்லாம் பத்திரிகைகள்பறைசாற்றுகின்றன. என்னவோ நாங்களும் ஏமாந்துவிடாமல் கொஞ்சம் விழிப்போடு இருக்கவேண்டுமல்லவா?

# வழுக்கி விழுந்த நகைச்சுவை நடிகர் துரைராஜ் அடிக்கடி இலங்கை வருவதன் மர்மம் என்ன?

"எம். ஜி. ஆர். பெரியவனா சிவாஜி பெரியவனான்னு எல்லாரும் கேக்குறாங்க. எனக்கு எல்லாப் பயலும் ஒன்னுதான்"

இந்தத்திமிர்பிடித்த உளறல் யார்வாயிலிருந்து உதிர்ந்ததென்று நினைக்கிறீர்கள்? திரு. டி. எஸ். துரைராஜ் திருவாய் மலர்தருளியதுதான். பழம் பெரும் நடிகனும், நடிப்புத்துறையில் தனக்கென ஒரு தனியான இடத்தை —யாரும் அணுகமுடியாத இடத்தை வகுத்துக்கொண்டவனுமான எம். ஆர். ராதா அளிக்கும் பதில்கள் அநேகமாக இந்தப் பாணியில்தான் அமைந்திருக்கும். ஆனால் அந்தப் பதிலில் அழகிருக்கும்—அர்த்தமிருக்கும் - அசைக்கமுடியாத உண்மை இருக்கும். அன்னநடைநடக்கப் போய்த் தன் நடையும் கெட்ட காக்கைபோல் அன்பர் துரைராஜர் கூறுவதைக் கேட்டால் அவர் சுயநினைவில் பேசவில்லையோ என்றுதான் எண்ணத்தோன்றுகிறது. ஏதோ நமது விருந்தாளியாக வந்திருக்கிறாரேயென்றுகௌரவமளிக்குமுகமாகப் பேட்டிகாணச்சென்றால் மனுஷன் மரத்தில் ஏறிவிடுகிறார். சினிமா உலகிலிருந்து அவர் வழுக்கிவிட்டவர் என்பதை - அவர் ஒரு எக்ஸ் நடிகன் என்பதை இலங்கை மக்கள் இன்னும் அறியாத அப்பாவிகள் என்று பாவம் நம்மை எண்ணிவிட்டார் போலும்.

ஹாஸ்யத்தோடு உயர்ந்த கருத்துக்களைப் புகுத்தினான் கலைவாணன் என். எஸ். கே. பழையபாணியில் அங்க அசைவினால் நம்மை ஆட்டிப்படைத்தான் காளி என். ரத்தினம். ஆங்கில நடிகர்களை அயர்ந்து போய் நிற்க வைத்தான் சந்திரபாபு தன் புதுமையான ஹாஸ்யநடிப்பால் - குணசித்திர நடிப்பால். தென்னகத்தை இழித்துப் பேசியதற்காக வடக்கே படையெடுத்துச் சென்ற செங்குட்டுவனின் வழித்தோன்றல் தங்கவேலு, வடநாட்டு யோஹாரை வாவென்று மல்லுக்கழைத்தவன். இன்றைய ஹாஸ்ய உலகிலே ஒளிவிட்டுப் பிரகாசிப்பவன். ஆனால் நமது துரைராஜர், பாவம் அவரை எந்த வரிசையில் சேர்ப்பது? அங்குபடப்பிடிப்புகள் இல்லாததால் அடிக்கடி அவரால் இலங்கை வரமுடிகிறது.

இவர் இங்குவருவதைப் பற்றிப் பலவிதமாகப் பேசிக் கொள்ளுகிறார்கள்.



# கற்பு கற்பு என்கிருர்களே, அது என்ன?

## ‘பெண்களை துடிக்கத்துடிக்க நெருப்பிலே போட்டு எரித்தார்களே’ அதிலேதான் கற்பு வாழ்கிறதா?

கற்பு என்ருல் என்ன? இது ஆராய்ச்சிக்குரிய விஷயமல்லவா? பெண்களின் நெறிவழுவாநிலை கற்பு என்று பண்டைக்காலத்தில் நம்பப்பட்டு வந்தது, கற்பு, பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும் வேண்டும் என்ருன் மாதர் சுதந்திரம் கோரிய பாரதி. ஆனல் அவன் கற்புக்கு வரைவிலக்கணம் கூறவில்லை.

“கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை” இதுஆன்ருேர் கருத்து. கணவன் சொல்லை மீருமை கற்பு என்று வியாக்கியானம் செய்கிருர்கள். தவருனவழியில் செல்லும் கணவனைத் தடுத்து நிறுத்தி நல்வழிப்படுத்துவது ஒரு மனைவியின் கடமையாக அமையும் போது புத்திகெட்ட ஒரு கணவனின் சொல்லை மீறுவது ஒரு நல்ல மனைவிக்கு இன்றியமையாததாகஆகிவிடுகிறது அப்போது கற்புக்குச்சரியான் வரைவிலக்கணம் என்ன?

பண்டைக்காலந் தொட்டு பெண்களிடம் எத்தகையகற்பு நெறியை ஆண்கள்எதிர்பார்த்து வந்திருக்கிருர்கள் என்பதை நாம் அறிவோம். கணவன் இறந்துவிட்டால் அதே சிதையில் மனைவியும் பச்சை உயிரோடு பதைக்கப்பதைக்கக் குதித்து உயிர் துறக்கும் காலமும் ஒன்று இருந்திருக்கிறது. ஓலமிடும் பெண்களைப் பலாத்காரமாக இழுத்துச்சென்று தீயில் போட்டுப் பொசுக்கியிருக்கிருர்கள். சில பெண்கள் தாமாகவே சிதை ஏறிஞர்கள். இதற்குக் காரணம் ஒருவகை விரக்நிலையே. தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவன் கடைசிநாளில் அமைதியாகச்சென்று தானகவே கழுத்தில் தூக்குக் கயிற்றை மாட்டிக்கொள்வது போன்ற நிலை. இதற்குப் பெயர் ‘கற்பு’ என்ருல் நம்மால் ஒப்புக்கொள்ள முடியுமா? கற்புக்கு வரைவிலக்கணம் வகுத்தவர்கள் சுயநலமிகள். அவர்கள் வகுத்த கற்பு நிலை பெண்களை அடிமைகள் போல் ஆக்கிவிட்டிருந்தது. ‘தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்குக் கோயில்களைத் திறந்துவிட வேண்டும்’ என்ற கோஷம் நாடு பூராவும் ஒலிக்கும் போது, கோவிலுக்குள் நாம் செல்வது பாவம் என்று கருதும் சில தாழ்த்தப்பட்டவர்களும் இருக்கிருர்கள். அதுபோன்றதுதான் இன்று கற்பைப்பற்றிச் சில பெண்கள் எண்ணிக்கொண்டிருப்பது.

ஆகாயமார்க்கமாகச்சென்ற கந்தர்வனின் நிழலை நீரில் கண்டதால் யமதக்னி முனிவரின் பத்தினி கற்பை இழந்தாள். உடனே யமதக்கினி மனைவிக்குத் தண்டனை கொடுத்தார். தன் மகன் பரசுராமனைக் கொண்டு மனைவியின் தலையை வெட்டி வீழ்த்திஞர். இது அந்தக்காலத்துக் கற்பு நிலை. இந்தக்காலத்தில் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்பக் கற்புக்குச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சலுகைகளை உன்னிப்பாகக் கவனித்துப்பார்த்தால் கற்பென்ருல் என்ன வென்ற சந்தேகம் ஏற்பட்டுவிடும்.

அந்நிய ஆடவரைப் பார்ப்பதும் தவறென்ருல் இன்றைய உலகில் கற்புள்ள பெண் ஒருத்தியுமேஇருக்கமாட்டாள்

அன்னிய ஆடவரைத் தீண்டுவதுதான்கற்பென்ருல் கிணற்றுள் வீழ்ந்த பெண்ணைக் காப்பாற்ருமல் இறக்கவிடவேண்டியதுதான். பெண்கள் கோவிலுக்குப் போகக்கூடாது, பஸ்ஸில் பிரயாணம்செய்யக் கூடாது, டாக்டருக்குப் படிக்கக் கூடாது, நேஸ்வேலை பார்க்கக் கூடாது......இப்படி எத்தனையெத்தனையோ!.

பிரசவ வேதனைப்படும் பெண்ணுக்கு டாக்டரிடம் உதவி வேண்டியிருந்தால் அதைநிறைவேற்றிவைக்க வேண்டுமா? அல்லது அப்பெண்ணை மாண்டுபோகவிட்டுவிடுவதா? ஆண் டாக்டர் சத்திரசிகிச்சை செய்து தாயையும் பிள்ளையையும் வேருக்கிப் பிழைக்கவைத்தால் தான் கற்புக் கெட்டுவிடுமே?

இப்போது கற்பை எந்த எல்லைக்கோட்டுக்குள் வைத்து நாம் ஆராய்வது? திருமண ஒப்பந்தத்தை மீருமல் இருப்பது ஒன்றைத்தான் நம்மால் கற்பென்று கூறமுடியும்.

[அவ்வளவுதான வாசகரே? நீங்களும் ஏதாவது அபிப்பிராயம் கூறவிரும்புகிறீர்களா? நல்லது; சுருக்கமாக எழுதுங்கள் பார்க்கலாம்!]

# அவனுக்கு ஏற்ற மனைவி எவள்?

## மூன்று பெண்களுக்குள் நடந்த தேர்வு

ஒரு ஊரில், ஒரு காலத்தில், இடையனொருவன் இருந்தான். அவனுக்கு கல்யாணம் செய்யவேண்டுமென்றஆசை உண்டாயிற்று. அந்தஊரில் மூன்று அழகான பெண்கள் இருந்தார்கள்; மூவரும் உடன் பிறந்த சகோதரிகள். மூவரும் ஒரேமாதிரி அழகாக இருந்தார்கள். அதனுல் யாரைக் கல்யாணம் செய்து கொள்வதென்று தெரியாமல் இடையன் திகைத்தான். கடைசியில் தன் தாயாருடைய ஆலோசனையைக் கேட்டான்,

“மூன்று பேரையும் நம் வீட்டுக்குச் சாப்பிடக்கூப்பிடு மூவருக்கும் ரொட்டியை எடுத்துவை. அவர்கள் எப்படிச் சாப்பிடுகிருர்கள் என்பதைக் கவனித்துப்பார். பின்னர் அதை என்னிடம்சொல்” என்று அவள் சொன்னுள்.


அந்த இடையன் அப்படியே மூன்று சகோதரிகளையும் சாப்பிட அழைத்துவந்து ஆளுக்கு ஒரு ரொட்டியை எடுத்து வைத்தான். ரொட்டியின்மேல் பாகம் மிருதுவாக இல்லாமல் கடினமாக இருந்தது. அதன் மேல்பாகத்தை உரித்துவிட்டு உள்ளேஇருப்பதைமட்டும் சாப்பிட நேர்ந்தது. ஒருத்தி தனக்கு வைத்த ரொட்டியை எடுத்து அதை உரிக்காமல் கொள்ளாமல் அப்படியே வாயில் போட்டு விழுங்கினுள். மற்ருெருத்திரொட்டியை எடுத்து உரித்தாள். ஆனுல் உரிக்கும்போது ரொட்டியின்பெரும்பாகம் மேல்பாகத்துடன் ஒட்டிக்கொண்டு வந்துவிட்டது. ஆனுல் அவள் அதைப் பொருட்படுத்தாமல் அப்படியே தூர எறிந்துவிட்டு மீதமுள்ளதைச் சாப்பிட்டாள். மூன்ருவது பெண்ணே தன் ரொட்டியை எடுத்து, ரொட்டிக்குச் சேதமில்லாமல் அளவாக மேல்பாகத்தை மட்டும் உரித்து எறிந்துவிட்டுச் சாப்பிட்டாள். இடையன் இந்த விடயங்களையெல்லாம் தன் தாயாரிடம் சென்று சொன்னுன். அவள் “மூன்ருவது பெண்ணை நீ கல்யாணம் பண்ணிக் கொள்” என்று சொன்னுள். அவ்வண்ணமே அவளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு இடையன் சந்தோஷமாக வாழ்ந்து வந்தான்.

### அச்சம் பெண்களுக்கு உரியதா?

‘அச்சம், நாணம் மடம் பயிர்ப்பு, இவை பெண்களின் தலையாய நான்கு குணங்கள், என்பது பண்டையோர் தீர்ப்பு. ஆனுல் அறிஞர்கள் ஆராய்ச்சி முடிபு என்ன?

அச்சம்: இது ஆண்களுக்கே சொந்தமானது. அவர்களைவிடப்பெண்கள் தைரியசாலிகள். நல்லவனே, குடிகாரனே, சூதாடியோ மனைவியைஉதைப்பவனே ஒன்றுமே தெரியாமல் மணமானமறுநாளே ஒரு பெண், புருஷனின்கையைப்பிடித்துக்கொண்டு பிறந்த நாள் தொட்டும் கூடி வாழ்ந்த பெற்ருேரை விட்டுவேளியே இறங்கி நடக்கிருள். இந்த ஒன்றே போதும் ஆண்களைக்காட்டிலும் பெண்கள் தைரியசாலிகள் என்று கூறுவதற்கு. இது சக்கரவர்த்தி ராஜ கோபாலாச்சாரியாரின் கருத்து.


# பேர்த் கிளீவ்லாண்ட் பம்ப்



வீட்டுப்பாவனைக்கும்

விவசாயத்

தேவைகளுக்கும்

சிறந்தது.

1" 1½" 2" × 3"

அளவுகளில்

பெற்ருேல்,

மண்ணெண்ணெய்,

டீசல்

மொடல்கள்

கையிருப்பில்

உள்ளன.

சென்ட் அந்தோனிஸ் ஹார்ட்வெயர் ஸ்ரோர்ஸ்,


516, ஸ்கின்னர்ஸ் ரோட் தெற்கு, கொழும்பு-10

Registered as a newspaper at the G. P. O

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...


## வில்லியேர்ஸ் சக்திவாய்ந்த தண்ணீர் பம்புகள்



அதிக ஆழமான கிணறுகளிலிருந்து வேகத்துடன் தண்ணீரை இழுக்கக்கூடிய 2 அங்குல குழாய்கள் கொண்டவை. இலகுவாக உருட்டிச் செல்லக்கூடிய ரப்பர் சக்கரங்களோடு இணைந்த பழுவற்ற எஞ்சின்.

25 அடிக்குக்கீழ் ஆழமுள்ள கிணற்றிலிருந்து தண்ணீரை இழுத்து 80 அடி உயரடாங்கிக்கு ஏற்றவும் சக்திவாய்ந்தவை.

மணிக்கு 7000 கலன் தண்ணீரை வேகமாக இறைக்கக் கூடியவை

**மஸ்கன்ஸ் லிமிடெட்** 175, ஆர்மர் வீதி, கொழும்பு—12.


# சங்கதி தெரியுமா?

பதவிதுறத்தலையும் இடமாற்றத்தையும் ஏககாலத்தில் எதிர்நோக்கியிருக்கும் யாழ்ப்பாணம் கச்சேரியின் உயர்தர வழுக்கைத் தலையொன்று தான் அங்கிருந்து வெளியேறுமுன் அனேகருக்குக் குழிபறித்துவிடும்போலத் தெரிகிறது. செய்திப் பத்திரிகைத்துண்டுகளுடன்கூடிய அதன் அந்தரங்க பைல் ஒன்றைத் தற்செயலாகத் தட்டிப்பார்த்த சங்கதி தெரிந்த ஊழியர் ஒருவர் சகபாடிகளுக்கு முன்னெச்சரிக்கை செய்திருக்கிறாராம்.

● ●

உளக்குமுறல் கொண்ட வாலிபர்படையொன்று கொழும்பு வை. எம். சி. ஏ. யில் வைத்து அல்பிரட் துரையப்பா எம். பி. யை வளைத்துப் பிடித்துவிட்டதாம். எங்கெல்லாமோ போன்செய்து தந்திரமாகத் தப்பித்துக்கொண்ட அவர் இனிப் பார்லிமெண்டுக்குப் போகும் போதெல்லாம் சிராவஸ்தியில்தான் தங்குவாராம். அதைப்போன்ற பாதுகாப்பான இடம் வேறு எதுவுமேஇல்லையென்பது அல்பிரட்டுக்குத் தெரியாத சங்கதியா?

● ●

தமிழகத்திலிருந்து மகாநாட்டு மலர்களைத் தருவித்து விற்றுப் பணம் அனுப்பாது நாமம் போட்ட தமிழ் விரிவுரையாளர் இப்போது எந்த ஆசிரிய கலாசாலையிலிருக்கிறார்.? திருக்கேதீச்சரம் சித்தாந்த மகாநாட்டில் அந்தத் தமிழ் நாட்டு அன்பரை அவர் சந்தித்தபோது சத்திரத்தில் மறைந்த சங்கதி தெரியுமா?

● ●

இ. போ. ச. தன் வடபிராந்திய டிப்போவை அநுராதபுரத்திலிருந்து மீண்டும்யாழ்ப்பாணம் கொண்டுவந்தது காரியத்தோடு தானும். ஒரே எறியில் இரண்டு காய் விழுத்தியதுபோல எஞ்சினியரிங் மேற்பார்வையையும், பிராந்திய அதிபர் பொறுப்பையும் ஒரே தலையில் இப்போது கட்டிவிட்டது கெட்டித்தனமான காரியமல்லவா? இரு பதவிகள் ஒரே தலைக்குள் அமுக்கப்பட்டுவிட்டன, வாழ்கசிக்கனம்

● ●

மட்டக்களப்பில் கடமையாற்றும் காரியாதிகாரி சீனிவாசன் பதவி துறக்க முடிவு செய்திருப்பது எதற்காக? அவரோடு சேர்ந்து சங்கம் ஒன்றைக் கட்டி வளர்த்தவர்களில் பேடித்தனமாக நட்டாற்றில்கைவிட்டுச் சரண்புகுந்தவர்கள் யார் என்பது அவருக்கு மட்டுமா தெரியும்? சீனிவாசன் இதற்கெல்லாம் அஞ்சாதவர் என்பது வவனியா காட்டிய பாடமாகும்.


● ●

இங்குள்ள தமிழ்ப்பத்திரிகைகளிலெல்லாம்இப்பொழுது ஒருதொற்று நோய்பரவிவருவது உங்களுக்குத் தெரியுமா? அதுதான் பட்டதாரித் தொற்றுநோய். முதலில் ஆரம்பித்தது ஒரு பணக்காரப் பத்திரிகைக்கந்தோரில். தொற்று நோய்க் கிருமிகள் சும்மா இருக்குமா? பற்றிக்கொண்டது. பத்திரிகையாளர்களின் துறைதனியானது. பட்டதாரியைக் காட்டிலும் பயிற்சியுள்ளவன் ஜமாய்த்துத் தள்ளிவிடுவான். இந்தப்பட்டதாரி மந்திரத்தைப்பற்றி நமது துப்பறிவாளர்கள் தந்துள்ள தகவல்கள் 'ஐயோபட்டதாரிகளே' என்று இரங்கத்தூண்டுபவை. பட்டம் பெற்று வீட்டோடு வேலையில்லாது வருடக்கணக்காய்த்தவங்கிடப்பதைக்காட்டிலும் வயிற்றைக்கழுவிக் கொண்டு ஒருதொழிலையும் கற்போமே என்று வந்திருக்கிறார்களாம் பாவம்!

● ●

மோட்டார் வானின் முன் ஆசனத்தில் இருவருக்குமேல் பிரயாணஞ்செய்வது சட்டவிரோதமானதாகும். மூன்றுவது ஆளாகப் பொலீஸ் ஊழியர்கள் இவைகளில் ஏறி உட்காருகின்றார்களே அது குற்றமாகாதா என்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் வினவும் மனுஒன்று இப்போது தயாராகி வருகிறது. வானை நம்பியிருக்கும் வாடிக்கைப்பிரயாணிகளில் பலர் இந்தமனுவில் கையொப்பமிடுவார்களெனத் தெரிகிறது.

வான்முதலாளிகள் இரகசியச்சங்கம் யார் யாருக்குக் கைலஞ்சம் கொடுக்கிறது, அதற்கான நிதி எப்படித்திரட்டப்படுகிறது, என்ற இரகசியங்கள் எல்லாம் மேற்படி மனுவின்மூலம் அம்பலமாகலாம்.



★

காந்தம் போன்ற கயல்விழிகளை ஏந்தி நிற்கும் இவள் யாரோ?

"மங்கைக்கு மாங்கல்யமே பிரதானம்" என்ற தமிழ்ப் படத்தில் ஆடும் தோகை மயில் போல மைனாவதி இப்படி ஒய்யாரமாகத் தோன்றுகிறார்.

★

படம்: கிங்ஸ்லி செல்லையா

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. சு. வரதராசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348. தந்தி: 'அச்சகம்'